
# மனங்களிலே... நிறங்கள்

ஒலுவில் அமுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
நகர சபை
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
நகர சபை
கல்முனை

# மனங்களிலே..
# நிறங்கள்

(சிறுகதைத் தொகுதி)

- ஒலுவில் அமுதன் -

# MANAKKALILEA NIRANKKAL

- Oluvil Amuthan -

REFERENCE

- ரக்ஷானா வெளியீட்டகம் -
அக்கரைப்பற்று - 05.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
R.15651

NO: 15657
CLASS NO: 894.8113

✠ நூலின் பெயர் :- மனங்களிலே நிறங்கள்

✠ வகை :- சிறுகதைத்தொகுதி

✠ ஆசிரியர் :- ஒலுவில் அமுதன்
(ஆ. அலாவுதீன்)

✠ பதிப்புரிமை :- ஆசிரியருக்கு

✠ ஆசிரியர் முகவரி :- 67, புதுப்பள்ளி வீதி,
அக்கரைப்பற்று - 05
தொலைபேசி 067 - 78339

✠ பதிப்பு :- 2001 பெப்ரவரி 18

✠ பதிப்பகம் :- "மெற்றோ ஓப்செற்"
அக்கரைப்பற்று.

✠ பக்கங்கள் :- **109**

✠ பிரதிகள் :- **800**

✠ அட்டைப்படம் :- நா. த. அக்ரம் "***COMPRO***"

✠ கணணி வடிவமைப்பு :- ரோஷன் எம். ஹனீபா
"***COMPRO***"
அக்கரைப்பற்று - 02

✠ விலை :- **100/=**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

## அறிமுகம்

கவிதை, சிறுகதை, கட்டுரை, நாடகம், நாவல் என எழுத்துலகில் அடிச்சுவட்டை பதித்துள்ள ஒலுவில் அமுதன்

மனக்கோலம் (கவிதை), மரணம் வரும் வரைக்கும் (கவிதை), கலையாத மேகங்கள் (சிறுகதை), நாம் ஒன்று நினைக்க (நாவல்) என கைவண்ணத்தை கலைவண்ணமாகத் தந்துள்ளார்.

மண்ணையும் மக்களையும் நேசிக்கும் சமுதாய உணர்வுமிக்க இவரது படைப்புக்கள் காலத்தை வென்ற கலைக்கோலங்களாக திகழுகின்றன.

அந்தனி ஜீவா -
(ஆசிரியர் புதிய நூலகம்)
தபால் பெட்டி எண் 32
கண்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலுவில் அமுதனின் வெளியீடுகள்...

01. மனக்கோலம்.
(கவிதைத் தொகுதி) (1988)

02. மரணம் வரும் வரைக்கும்.
(கவிதைத் தொகுதி) (1999)

03. கலையாத மேகங்கள்.
(சிறுகதைத் தொகுதி) (1999)

04. நாம் ஒன்று நினைக்க...
(நாவல்) (2000)

05. மனங்களிலே... நிறங்கள்
(சிறுகதைத் தொகுதி) (2001)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்னுரை

பிரபல எழுத்தாளர் நாடறிந்த கவிஞர் ஒலுவில் அமுதன் அவர்களின் ஐந்தாவது வெளியீடான இச்சிறுகதைத் தொகுதிக்கு இலக்கியவாதி என்ற வகையில் எனது இனிய வாழ்த்துக்களை மலையகத்திலிருந்து கிழக்கிலங்கை நோக்கி வழியனுப்புவதில் பெருமைப்படுகின்றேன்.

1976ல் இலக்கியப்பணிபுரிய ஆரம்பித்த ஒலுவில் அமுதன் அவர்கள் இன்று வரை இலக்கிய வானில் ஒளி குன்றா நட்சத்திரமாக ஜொலித்துக் கொண்டிருக்கிறார்.

1988ல் 'மனக்கோலம்' கவிதைத் தொகுதியை வெளியிட்டார். 1999ல் 'மரணம் வரும் வரைக்கும்' என்ற மற்றுமொரு கவிதைத் தொகுதியை வெளியிட்டார். அதே ஆண்டில் 'கலையாத மேகங்கள்' என்ற சிறு கதைத் தொகுதியை வெளியிட்டார். 2000ல் 'நாம் ஒன்று நினைக்க' நாவல் வெளியானது.

தற்போது உங்கள் கரங்களில் இருக்கும் இச்சிறுகதைத் தொகுதியே அவரது ஐந்தாவது வெளியீடாகும்.

இவ்வாறு ஒன்றன் பின் ஒன்றாக அவரது வெளியீடுகள் வந்த வண்ணம் இருக்கின்றன. நவீன எழுத்துலகில் இவரது முற்போக்கான கருத்துக்கள், ஆழமான சிந்தனைகள் சமூக சீர்திருத்த உணர்வுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பனவற்றினால் தமிழ்கூறு நல்லுலகம் பெருமைப்பட வேண்டும்.

ஒலுவில் அமுதன் என்ற இனிய பெயர் இலங்கையில் வெளிவரும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் எல்லாவற்றிலும் அடிக்கடி வெளிவருவதுடன் வாசகர்களையும் ஈர்த்து வருகிறது.

சிறு கதைப்போட்டி கவிதைப் போட்டி என்பவற்றில் பரிசுகளையும் தட்டிக் கொண்டவர்.

இச்சிறு கதைத்தொகுதியிலுள்ள அனைத்து கதைகளும் முற்போக்குச் சிந்தனையின் விளைவுகளே.

இலக்கிய உலகில் ஒலுவில் அமுதனுக்கு சிறப்பான ஓரிடமுண்டு என்பதை மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அவரது பணி தொடர வாழ்த்துகிறேன்.

ஜனாப் எம்.வை.எம். மீஆத்
*BA, Dip - In - Ed.*
(பத்ருல் உலூம்)
தும்புளுவாவை,
ஹெம்மாதகம
*2001.01.18*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

# பொருளுரை

'நாம் ஒன்று நினைக்க' நாவலில் வரும் வதனா, சந்திரன் என்கின்ற இரு பாத்திரங்களும் கதைக்கு உயிரோட்டமாய் அமைகின்றன. தனது தங்கைக்காக தன் திருமணத்தையே தள்ளி வைக்கிறான் சந்திரன். அலுவலகத்தில் வதனாவுக்கும் சந்திரனுக்கும் இடையே காதல் அரும்புகிறது. திருமண நாளை எதிர்பார்த்து காத்திருக்கிறாள் வதனா.

தங்கையின் திருமணத்தின் பின் நமது திருமணம் என்று உறுதி கூறுகின்றான் சந்திரன். அவனது தங்கையின் திருமணம் நிறைவேறி குறுகிய காலத்திற்குள் அவளது கணவன் விபத்தொன்றில் இறந்து விடுகின்றான். சந்திரனின் தங்கை மீண்டும் தனி மரமாக நிற்கின்றாள். இதனால் சந்திரன் திருமணத்தை மீண்டும் தள்ளிப்போடுகின்றான். திருமணத்தை எதிர்பார்த்து காத்திருந்த வதனா ஏமாற்றத்தினால் அதிர்ச்சிக்கு உள்ளாகி இறந்து விடுகின்றாள்.

இதுதான் நாவலின் கரு. மிக விறுவிறுப்பாக நகர்கிறது கதை. ஆபாசம் இல்லாத யாவரும் படிக்கக்கூடிய நாவல்.

இக்கதையின் இறுதியில் வதனா இறக்காமல் சந்திரனை மணம் முடிப்பது போல முடித்திருந்தால் வாசகர்களுக்கு ஒரு மனநிறைவு ஏற்பட்டிருக்கும் என நினைக்கிறேன்.

செல்வி. ஹாந்தமதி நவநீதன்,
பாண்டிருப்பு - 02
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுவுரை

அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ்.

எனது ஐந்தாவது நூலில் சந்திக்கிறீர்கள். இந்த அளவிற்கு என் இலக்கியத்தை வளர்த்தவன் மேலும் மேலும் வளர்க்க இருப்பவன், என் புத்தக விற்பனைக்கு புதுவழியைக் காட்டியவன் எல்லாம் வல்ல இறைவன் ஒருவனே!

அவன் தூயவற்றை என் நெஞ்சில் விதைக்கின்றான். நற்பலனை அனுபவிக்கின்றேன். வெளியீட்டு விழாவிற்கு சொற்ப தொகையினர் வந்தாலும் மூன்று மாதங்களுக்குள் என் புத்தகங்கள் அனைத்தும் விற்று முடிந்து விடுகின்றன என்பதை நினைக்க அழவிலா ஆனந்தம் ஏற்படுகின்றது.

என் புத்தகங்களை அதிகளவில் கொள்வனவு செய்யும் இந்துக் கலாச்சாரத் திணைக்களம், வடகிழக்கு கல்வி கலாசாரத் திணைக்களம், உயர் கல்வி அமைச்சு, தேசிய நூலகம், கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் மாநகர சபைகளுக்கும் வவுனியா, திருகோணமலை, காத்தான்குடி, முல்லைத்தீவு, கல்முனை நகர

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைகளுக்கும், மன்னார், வெலிமடை, மூதூர், புத்தளம், பொத்துவில், சம்மாந்துறை, நிந்தவூர், அட்டாளைச்சேனை, மண்முனை ஆகிய பிரதேச சபைகளுக்கும் பேராதனை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், ஒலுவில் பல்கலைக்கழகங்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

குறிப்பாக கொழும்பு புறக்கோட்டை பூபாலசிங்கம் புத்தகசாலை, மருதானை இஸ்லாமிய புத்தக நிலையம், அக்கரைப்பற்று சென்றல் புத்தக நிலையம் ஆகியவற்றின் உரிமையாளர்களுக்கும் இதயம் கனிந்த நன்றிகள்.

சிறந்த இலக்கியவாதியை எவராலும் அழித்து விட முடியாது. உயர்வைத் தடுத்து நிறுத்த முடியாது. அடுத்த வெளியீடுகளாக சமூக நாவல், கவிதைத் தொகுதி ஆகியவற்றை எதிர்பாருங்கள்

உங்கள் எழுத்தாளர், கவிஞர்
ஒலுவில் அமுதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே



01. இதுதான் சேவையா?

02. நெருஞ்சி முள்

03. தெருவோர தேவதை

04. துடுப்பில்லாத தோணிகள்

05. வைராக்கியம்

06. எலியும் பொறிகளும்

07. இப்படியும் வாழ்கிறார்கள்.

08. ஒன்றாக பிறந்த பொறாமை

09. இதயத்தில் ஒரு நிறம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

## இதுதான் சேவையா?

அன்றிரவு ரவீந்திரன் ஆசிரியருக்கு தூக்கம் வரவில்லை. சுயலாபத்திற்காக ஒரு திட்டத்தைப்போட்டு அதை செயற்படுத்தா விட்டால் அவருக்கு தூக்கமே வராது. சுயநலத்தின் மொத்த வடிவம் ரவீந்திரன் ஆசிரியர் என்பது ஒரு சிலருக்குத்தான் தெரியும்! அனேகரிடத்தில் நல்லபிள்ளையாக நடித்து எடுபட்டிருந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவி மக்களை கூட்டிவைத்து வேடம் மறைத்து உரையாற்றிக் கொண்டிருந்தார்.

“நமது மகாவித்தியாலயம் பேரு மட்டும் தான் மகா வித்தியாலயம் பிள்ளைகளுக்கு ஒழுங்கான லைபரரி இருக்கா? விஞ்ஞான கூடம் இருக்கா? விளையாட்டு மைதானமாவது இரிக்கா? என்ன இரிக்கு? நமது நற்போக்கு மன்றம் மூலமா நாம பணம் சேர்த்து சிறிய லைப்ரரி ஒன்றை கட்டி எழுத்தாளர்கள், கவிஞர்களிடம் இருந்து கொஞ்ச புத்தகங்களை எடுத்து கொடுப்போம்” என்றார் ரவீந்திரன் ஆசிரியர்.

அவர்தான் நற்போக்கு மன்றத்தின் நாயகன். (தலைவர்) “தலைவர் சொன்னா அது செய்ய வேண்டிய பணியாகத்தான் இருக்கும். அதனை நாமெல்லாம் வரவேற்று செயல்ல இறங்கத்தான் வேணும்” என்றார் நற்போக்கு மன்றத்தின் செயலாளர் நாயகம் துரைராஜா.

தலைவரும் செயலாளரும் மிக நெருங்கிய நட்பு கொண்டவர்களாக இருந்தார்கள். தலைவர் எது சொன்னாலும் தலையாட்டும் பொம்மையாக இருந்தார் செயலாளர் துரைராஜா. இவருக்கு தலைவரின் கரண்டல்கள் தெரிந்தும் தெரியாததுபோல இருந்தார். செயலாளர் துரைராஜாவும் பத்திரிகை வாயிலாக பிரபல்யமாகிக் கொண்டு வந்தார்.

“தலைவர் ரவீந்திரன் என்ன கொள்ளை அடித்தாலும் பரவாயில்லை. என்னையும் சேவையின் சின்னமாக விளம்பரப்படுத்துகிறாரே! அது போதும்” என்று எண்ணினார் துரைராஜா.

“வாங்க உட்காருங்க” என்றார் துரைராஜா. துரைராஜாவின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
நகர சபை
கல்முனை



வீட்டுக்கு போயிருந்தார் ரவீந்திரன்.

"நாம் ஊரிலே பணம் அறவிடுற வேலையை ஆரம்பிக்கணும். காசு தரக்கூடிய பணக்கார வீடுகளுக்கு போய் சரியான லெக்ஸர் கொடுக்கணும். அந்த லெக்ஸரிலே மயங்கி அவங்க அள்ளித் தரணும். சனிக்கிழமை ஊருக்கு போவம்" என்றார் நற்போக்கு மன்றத்தின் தலைவர் ரவீந்திரன்.

" நானும் வாறன். பொருளாளர் கேசவனையும் கூட்டிற்று போவோம்" என்றார் துரைராஜா.

"அவர் இருக்கட்டும். எடுக்கிற பணத்திலே வங்கியில் போட்டு வைக்கப்போறமா? அதை எடுத்துத்தான் கட்டிடம் கட்டணும். மிச்சத்தை பிறகு பேசுவம். சனிக்கிழமை காலையிலே சாந்தி ஹோட்டல் அருகே வாருங்கள்" என்று சொல்லி போய்விட்டார் ரவீந்திரன்.

"அவர் ஏதாவது பொதுச் சேவைக்கு துணிந்து விட்டார் என்றால் அவருக்கு பணம் தேவைப்படுகிறது என்று அர்த்தம். பணத்தை ஒரு பிடிபிடித்துவிட்டு மிகுதியில் தானே சேவை" என்றெண்ணிக் கொண்டான் நற்போக்கு மன்றத்தின் அங்கத்தவரான குமார்.

அவன் எத்தனையோ முறை ரவீந்திரனின் முறையற்ற நடத்தையை சொல்லிக்காட்டி இருக்கிறான். அவையெல்லாம் கட்டுக்கதையென மன்றத்தின் முக்கியஸ்தர்களால் தட்டிக் கழிக்கப்பட்டு வந்தது.

குமார் தகுதி வாய்ந்த அரசதுறை அதிகாரியாக இருந்தும் பிழைகளை சுட்டிக்காட்டுவதால் வெறும் அங்கத்தவனாகவே இருக்கின்றான். அவர் என்ன செய்தாலும் வாய்மூடி மௌனமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதால்தான் துரைராஜா நிரந்தர செயலாளராக இருக்கின்றார்.

சனிக்கிழமை காலை துரைராஜா சாந்திஹோட்டல் முன்பாக இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

நேரம் காலை எட்டுமணி, துரைராஜாவை பொறுத்தவரை கஷ்டப் பட்டே எழுந்தார். அவர் வேலைக்கு போவதே தாமதித்துத்தான். பொது நலவாதி என்ற பெயரை வாங்கும் வேலையல்லவா!

ஒன்பது மணிக்குத்தான் தலைவர் ரவீந்திரன் வருவார் என்று நினைத்தவராக சிகரெட்டை பற்ற வைத்துக் கொண்டார். அவர் நிமிடத்துக்கு நான்கு முறை இருமினாலும் புகைத்தலை மட்டும் விடமாட்டார்.

எட்டரை மணிபோல் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு இறங்கி வந்தார் ரவீந்திரன்.
"மிச்ச நேரமா வந்து"?
"வந்து அரை மணியாகுது" என்றார் துரைராஜா.

"பரவாயில்லை. வாங்க இடியப்பம் தின்னுட்டு போவம். சேர்க்கிற காசிலே இடியப்பச்செலவு மோட்டார் சைக்கிள் பெற்றோல் செலவு என்லாத்தையும் எடுக்கலாம். நமக்காக செலவு செய்யல்லியே! ஊருக்கு" என்றார் தலைவர் ரவீந்திரன். அவர் பச்சை டீசேட்டும் கறுப்பு காற்சட்டையும் அணிந்து அரசியல்வாதிபோல தோற்றமளித்தார்.

இருவரும் தொண்டைக்குழிவரை சாப்பிட்டுக்கொண்டார்கள் ஓசியென்றால் கேட்கவேண்டுமா? கோழிக்கறி, மீன்பொரியல் என்று வாங்கிச் சாப்பிட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"துரைராஜா உன்ர பைக்கை இந்தக் கடையோரம் வைத்து பூட்டிற்று என்ர மோட்டார் சைக்களில் போவம்". என்றார் ரவீந்திரன்.

"ஆமா. அப்படியே போவம்" என்று சொன்ன துரைராஜா சைக்கிளை ஓரத்தில் வைத்து பூட்டிவிட்டு தலைவர் ரவீந்திரனின் மோட்டார் சைக்கிளில் ஏறிக்கொண்டார்.

சந்தியில் உள்ள எம்.பி.ஐ. பெற்றோல் நிலையத்தில் பெற்றோலை நிரப்பிக் கொண்டார் ரவீந்திரன்.

"ஊரெல்லாம் சுத்தணுமே. அதுதான் நாலுலீட்டர் அடிச்சேன். பெற்றோல் காலைச்சாப்பாட்டோடு முன்னூத்தி ஐம்பது. இப்ப நாம சுல்தான் போடியார்ர வீட்ட போவம். முஸ்லிமாக இருந்தாலும் எல்லாத்துக்கும் உதவுற மனப்பான்மை உள்ளவரு" என்று ரவீந்திரன் சொன்னதுடன் சுல்தானின் வீட்டையும் அடைந்தார்கள்.

"வாங்க தம்பி" என்று வரவேற்று உட்கார வைத்தார் சுல்தான் போடியார்.

"என்ன விஷயம்? சும்மா வரமாட்டீங்களே" என்று தொடங்கினார் அவர்.

" லைபரரி ஒன்று கட்டி கொடுக்கப்போறம். அதுக்கு கலக்ஷன் பண்ணிக்கிட்டு வாறம்.. மகா வித்தியாலயத்துக்கு ஒரு லைபரி இல்லியே" என்று கூறி சேர்ட் கொலரை பிடித்து நேராக வைத்துக் கொண்டார்.

"ஓமோம் தம்பி. நீங்க சேவையின் சிகரம். அதுக்குத்தான் 'சேவைத்தென்றல்' என்ற பட்டமும் தந்திருக்கிறாங்கள். முன்ன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்ன என்கையால வாங்கிற்று போற நல்லெண்ணத்தோட வந்திருக்கீங்க. இந்தாங்க பிடிங்க" என்று கூறி ஆயிரம் ரூபா நோட்டுக்கள் இரண்டை ரவீந்திரனின் கையில் வைத்தார். சுல்தான் போடியார்.

"அப்ப நாங்க போறம் போடியார். ஊர் முழுக்க போறவேலை இருக்கு" என்று சொல்லி எழுந்தார் ரவீந்திரன். தலையாட்டி வழி அனுப்பினார் சுல்தான் போடியார். ரவீந்திரனுக்கு பின்னால் பூனைக்குட்டிபோல போனார் செயலாளர் துரைராஜா.

ரவீந்திரனின் கையில் சுல்தான் போடியார் எவ்வளவு வைத்தார் என்பது துரைராஜாவுக்கு கூட தெரியாது.

"சுல்தான் எவ்வளவு தந்தார்" துரைராஜா கேட்டார்.
"ஆயிரம் ரூபா நோட் பண்ணிக்கீங்க. அதுல நம்முட செலவு போக ஐநூறு இருக்கு" என்றார் ரவீந்திரன். பொதுச் சொத்தில் தின்று வளாந்தவர் அல்லவா இந்த ரவீந்திரன். ஒருவனிடம் வாங்கியதிலே அரைவாசியை சுருட்டிக் கொண்டார் என்றால் வாசிகசாலை பெயரிலே அவர் ஒரு மாளிகையே கட்டிக் கொள்வாரோ?

மோட்டார் சைக்களில் பின்னால் ஏறிக் கெண்டார் துரைராஜா, ரவீந்திரன் கிக்கரில் உதைத்தார்.

சண்முகம் முதலாளியின் வீட்டில் போய் இறங்கினார்கள். சிரித்தவாறு வரவேற்று உட்கார வைத்தார் முதலாளி சண்முகம்.

"வாழ்க்கைச் செலவு தான் வானத்துக்கு போய் விட்டது. நாம் என்ன செய்யலாம்?" என்று சொல்லி வாயை திறந்தார் ரவீந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க சேவைக்கு பிறந்தவங்க. சும்மா வரமாட்டீங்க. ஏதோ சேவைக்காகத்தான் வந்திருப்பீங்க" கூறினார் சண்முகம் முதலாளி.

"ஓமோம் முதலாளி, ஸ்கூலுக்கு லைப்ரரி கட்டப்போறம். காசு தேவைப்படுது. வசதி உள்ளவங்களுக்கிட்ட ஆயிரம், இரண்டாயிரம் என்று சேர்த்திட்டு வாறம்" என்றார் ரவீந்திரன்.

"நல்ல வேலை. நீங்க செய்து வாற பணியெல்லாம் தேவையானது தான்! உங்களுக்கு நிறையப்பேர் உதவுவாங்க" என்று சொன்ன சண்முகம் உள்ளறைக்குள் புகுந்தார். ஆயிரம் ரூபா தாள்கள். அப்படியே சுருட்டி ரவீந்திரனின் கையில் வைத்தார். சுருட்டி காற்சட்டையினுள் தள்ளினார் ரவீந்திரன்.

"அப்போ நாங்க போறம் முதலாளி. உங்களைப் போலவங்க செய்யிற உதவியாலேதான் நாங்க பெயரெடுக்கிறோம்" என்று கூறி மோட்டார் சைக்கிளை ஸ்ராட் செய்தார்.

பொம்மை மாதிரி பின்னால் ஏறி குந்தினார் துரைராஜா.

"துரைராஜா தாறதை எல்லாம் பக்கட்ல போட்டிருக்கன். வீட்டிலே போய் எண்ணுவம். பனிரெண்டு மணிவரையும் அறவிடுவோம். மிகுதியை நாளைக்கு தொடருவம்" என்றார் ரவீந்திரன்.

"ஓ இன்னும் நேரம் இருக்குத்தானே இப்பதானே பத்துமணி ஊர்ப்போடியார்ர தெருவால போவம். அங்கநெறைய பணக்காரங்க. இருக்காங்க" என்றார் துரைராஜா.

"அதால தான் போகப் போறம்" என்று கூறி பயணத்தை தொடர்ந்தார் ரவீந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகல் பனிரெண்டு மணிவரை ஓடி ஓடி. பணம் சேர்த்தார்கள். நல்ல பணி என்பதால் எல்லோரும் மனம் வைத்து கொடுத்தார்கள். சேர்ப்பதில் பாதியை மறைப்பது பொது ஜனங்களுக்கு எங்கே தெரியப்போகிறது? உண்மையை சொல்லும் நல்லவர்களைக் கூட உதவாதவன் என்றல்லவா எண்ணுகிறார்கள்.

ஒரு மாதத்திற்குள் நிறையப்பணம் சேர்த்துக் கொண்டார்கள். இன்னும் வாசிகசாலை கட்டிடம் தொடங்கப்படவில்லை. தலைவர் ரவீந்திரனின் வீடு பொலிஷ் பண்ணப்பட்டு வர்ணம் தீட்டப்படலாயிற்று.

அடுத்தவாரம் வாசிகசாலை கட்டிட வேலை தொடங்கவிருப்பதாக வும் இன்று நற்போக்கு மன்றத்தின் கூட்டம் இருப்பதாகவும் தெரிய வந்தது.

மன்றத்து அங்கத்தவர்களுடன் பொது மக்களும் நிறையப்பேர் வந்திருந்தார்கள். தலைவர் ரவீந்திரன், செயலாளர் துரைராஜா உட்பட மன்றத்து அனைத்து அங்கத்தவர்களும் வந்திருந்தார்கள். செயலாளர் துரைராஜா எழுந்தார்.

"பொது மக்களே.. மன்றத்து உறுப்பினர்களே அன்பின் வணக்கம். நாங்கள் பாடசாலைக்கு ஒரு லைபரரி கட்டிக் கொடுக்கப் போறது எல்லோருக்கும் தெரியும். இதற்கு முன் பல பணிகள் புரிந்திருகிறோம். ஏழைகளுக்கு உதவி இருக்கிறோம்.

அனாதை விடுதி கட்டி கொடுத்திருக்கிறோம். பொது மக்களின் பணமாக இருந்தாலும் அதை சேர்த்து எடுப்பதற்கு எவ்வளவோ கஷ்டப்படுகிறோம். நமது தலைவர் ரவீந்திரன் உங்கள் முன் உரையாற்றுவார்" என்று கூறி அமர்ந்தார் துரைராஜா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்பு உள்ளங்களே வணக்கம். அடுத்த வாரம் லைப்ரரி கட்டும் வேலையை ஆரம்பிக்கப்போகிறோம். சேர்த்த பணம் போதாது. வெளியூர்களில் இருந்தும் பணம் பெறப்போகிறோம்" என்று கூறியது தான் தாமதம். குமார் எழுந்தான்.

"மக்களே சில வார்த்தைகள், தலைவர் சேவைத்தென்றல் என்றெல்லாம் புகழுகிறீர்களே. அவர் தனது கெட்டதனத்தை மறைக்க சில போலிச்சேவை செய்கிறார். இவரைப் பற்றி உங்களுக்கு சரியாகத் தெரியாது. இந்த இடத்தில் இதனைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன" என்றான் குமார்.

"ரவீந்திரனைப் பற்றி அவதூறு பேசாதீர்கள்" என்றார் செயலாளர் துரைராஜா.

"குமார் பேசட்டும். கேட்போம். பேசு" என்று பொதுமக்கள் கூக்குரல் இட்டார்கள்.

"நன்றி அன்பு நெஞ்சங்களே. தலைவர் ரவீந்திரனுக்கு ஆசிரிய தொழிலைத்தவிர வேறு ஏதும் இல்லை. அன்றாட செலவுக்கே அது போதாது. அப்படி இருக்க ஒரு இலட்சம் செலவு செய்து பாத்ரூம் கட்டி இருக்கிறார். அது எப்போதுதெரியுமா? அனாதை விடுதி கட்ட பணம் வசூலித்த வேளை.

சுற்றி மதில் கட்டினார். எப்ப தெரியுமா? கோவிலுக்கு பண உதவி செய்யவேண்டும் என்று பணம் அறவிட்ட நேரம்.

குசினியை உடைத்துக் கட்டினார். எப்ப தெரியுமா? ஏழைகள் நூறு பேருக்கு பணம் வழங்க நிதி திரட்டியபோது. இப்போது வீட்டை பொலிஷ் பண்ணி பெயின்ட அடிக்கிறார் எப்படி தெரியுமா? லைப்பரரிக்கு அறவிட்ட பணத்தில். சேவையென்று தொடங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
R_15651

கொண்டு தனது தேவையை நிறைவேற்றும் இவர்களை வெளிச்சத்துக்கு கொண்டு வருவதுதான் எனது வேலை. மக்களே இனி உங்கள் தீர்ப்பு வேளை" என்று கூறி அமர்ந்தான் குமார்.

"ஆமா... குமார் சொல்ற அனைத்தும் உண்மை" ஒரு குரல். "இனி சும்மா சும்மா இவனுகளுக்கு பணம் கொடுக்கக் கூடா" மற்றொரு குரல்.

"ரிஸீட் வாங்காம பணம் கொடுக்ககூடாது" "ரிஸீட் புத்தகத்தையே கிழிச்சு வீசி கணக்கு காட்டாம இருப்பானுகள். கள்ளனுக்கா தெரியாது கள்ளப்புத்தி? இவனுகளுக்கு காசே கொடுக்கக்கூடாது" பொருளாளர் கேசவனே சொன்னான். தலைவர் ரவீந்திரன் பேசாமலே எழுந்து சென்று மோட்டார் சைக்கிளை ஸ்டாட் செய்தான்.

"இனி உன் போலிசேவை முடிஞ்சிது சேவை நட்சத்திரமே ரோட்டுக்கே வரமுடியா வீட்டுக்கே போ" என்றான் குமார்.

செயலாளர் துரைராஜா எப்படி மாயமானார் என்றே தெரியவில்லை. அடுத்த நாட்காலை ஊரெங்கும் பரபரப்பு தெருவொங்கும் சுவரொட்டிகள். அதில் ஒவ்வொரு சேவைக்காக ரவீந்திரன் செலவு செய்ததை விட இரு மடங்கு தனது வீட்டு வாசலுக்கு செலவு செய்யப்பட்டது ஆதாரத்துடன் எழுதப்பட்டிருந்தது.

அந்த ஊரே விழித்துக்கொண்டது. சிலரை சில நாள் ஏமாற்றலாம். பலரை பலநாள் ஏமாற்றமுடியதல்லவா? இத்தகைய புல்லுருவிகளால் உண்மையான சேவை மனப்பான்மையுடன் பணியாற்றும் நல்ல உள்ளங்களுக்கும் கெட்ட பெயர் தானே?

(வீரகேசரி வார வெளியீடு 20.08.2000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE

## நெருஞ்சிமுள்

முக்தார் பல்கலைக்கழகத்துக்குள் காலடி வைக்கமுதல் பட்டதாரி யானவன் நான். பத்து வருடங்கள் ஆசிரியத் தொழிலில் அனுபவம் பெற்றுவிட்டேன்.

இப்போதுதான் எங்கள் கிராமத்துப் பாடசாலைக்கு நியமனம் பெற்று வந்திருக்கிறார் முக்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் இருக்கிறார்கள். வெளியூரார்கள் என்றால் கொஞ்சம் இளக்காரமாகத்தான் பார்ப்பார்கள். படித்தவர்கள் சிலரிடமும் இந்தப்பழக்கம் உண்டு. எந்த ஊரவர்கள் என்றாலும் எனக் கொன்றுமில்லை நல்லவர்களை மதிப்பேன் கெட்டவர்களை வெறுப்பேன்.

முக்தாருடன் கொஞ்சம் நெருக்கமாகவே பழகத் தொடங்கினேன். எல்லா விதத்திலும் அவனுக்கு 'சீனியர்' என்பதால் 'பசீர்' என்று செல்லமாக என்னை பெயர் சொல்லி அழைத்து பேசுவான். எல்லா விடயத்தையும் என்னிடம் ஆலோசனை கேட்டே செய்வான்.

பணிவுடன் கூடிய முக்தாரின் நட்பு மிகவும் இறுக்கமடைந்து விட்டது.

எங்கள் பாடசாலையில் என்னோடு சேர்ந்து நான்கு பட்டதாரிகள். சரீனா மாத்திரம்தான் பெண் பட்டதாரி. அவள் முக்தாருடன் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்றவள். இருவருக்குள்ளும் உறவு நெருக்கமாகத்தான் இருக்கிறது. காதலென்று துணிந்து சொல்லவும் முடியாதிருந்தது. ஒரு ஆணுடன் ஒரு பெண் கதைத்தால் திடீரென முடிவு கட்டுவது முட்டாள் தனம்.

நான் கடமைக்கு வந்து ஐந்து பத்து நிமிடங்கள் கடந்த பின்னர்தான் முக்தார் வருவான்.

"அஸ்ஸலாமு அலைக்கும்" நான் முந்தி வருவது போல முந்திக் கொண்டேன்.

"அலைக்குமுஸலாம்" என்று பதில் இறுத்து விட்டு சற்று மௌன மானான் முக்தார். அவன் இப்போது முன்னரைவிட வித்தியாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலப்பாகப் பேசுகின்றவன் அளந்து பேசுகின்றான். கட்டுப்பாடின்றி என்னுடன் பழகுகின்றவன். ஒரு வரையறை வைத்து பழகுகின்றான். ஏனைய ஆசிரியர்களுடனும், கர்வத்துடன் பேசுகின்றான்.

அப்துல்லா ஆசிரியர் முக்தாரைப்பற்றி இன்று காலை என்னோடு கூறியவிடயம் இரத்தத்தை உறைய வைத்துவிட்டது.

ஐந்தாமாண்டிற்கு தமிழ்ப்பாடம் நடத்திக் கொண்டிருந்தாராம் முக்தார். அந்த பிஞ்சு வயதினருக்கு எந்தக் கள்ளம் கபடமும் இருக்கமாட்டாதுதானே. பாடம் நடத்தி நடுக்கட்டத்தில் கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கிறார். ஜப்பார் என்ற மாணவன் இடத்தில் கேட்டிருக்கிறார். 'தெரியாது' என்றிருக்கிறான் மாணவன். 'உங்களுக்கு உங்கள் வாப்பாமாரையே தெரியாது என்றிருக்கிறார் முக்தார்.

ஆசிரியர் என்கின்ற பண்பு தவறி எவ்வளவு இழிவாகப் பேசியிருக்கிறார் முக்தார் ஆசிரியர். இப்படி சின்னப்பிள்ளைகளிடமே கேவலமாகப் பேசுகின்ற ஆசிரியர்கள் பெற்ற பட்டங்கள் வெறும் வட்டங்கள்தான். சமூகத்துக்கு பயனில்லாத சாக்கடைப் பட்டங்கள்.

ஆசிரியர்களிடத்திலும் மாணவர்களிடத்திலும் முக்தார் ஆசிரியர் பேசுகின்ற பேச்சுக்கள், நடக்கின்ற முறைகள் அவன்மீது எனக்கு அதிக வெறுப்பை ஏற்படுத்தி விட்டது.

அடுத்த நாட்காலை வரவு அறிக்கையில் கைஎழுத்திட்டார் முக்தார். நான் 'ஸலாம்' கூட சொல்லவில்லை என்னை ஏறெடுத்தும் பார்க்கவில்லை. வெளியே போய் சிகரட் பற்றவைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படிப்பட்ட முரட்டுத்தனமான முக்தாரை நல்லவன் என்று நம்பியதே முட்டாள்தனம். இப்படிப்பட்ட முக்தாரிடம் நெருங்கிப்பழகியதே மாபெரும் தவறு. மற்ற ஆசிரியர்களைப்போல நானும் முக்தாரைக்கண்டால் விலகிப்போகத் தொடங்கினேன்.

மாணவர்கள் விடயம் ஒரு புறமிருக்க முக்தார் எந்த ஆசிரியர்களிடமும். பழகுவதுமில்லை, பேசுவதுமில்லை.

சரீனா ஆசிரியையோடு மட்டும்தான் எல்லா உறவுகளும் இருக்கும். அவளின் தம்பி முஸ்தபாவோடு இரண்டொரு வார்த்தை பேசுவான். அவ்வளவுதான். வாய் இருப்பதன் மகத்துவமே தெரியாத வரண்ட நெஞ்சு கொண்டவன் முக்தார் என்பதை நான் மறுக்கமுடியுமா?

இவனைப்போல இரண்டொரு ஆசிரியர்கள் வந்துவிட்டால் மாணவர்கள் பயங்கரவாதியாக மாறுவார்கள் என்பதில் சந்தேகமேயில்லை.

பாடசாலையை விட்டு ஆசிரியர்களும், மாணவர்களும் வீடு நோக்கி விரைந்து கொண்டிருந்தார்கள்.

என்னை நோக்கி அதிபர் அனிபா வந்தார். "கொஞ்சம் நிக்கனும் முக்கியமான விஷயமிருக்கு தனியா பேசனும்" என்றார்.

இப்படி அதிபர் சொன்னதும் என்னவாக இருக்கும் என்பதிலே என்மனம் மும்முரமாக இயங்கியது.

நிச்சயம் என்னைப்பற்றி இருக்க முடியாது நான் எந்த சூதுவாதுக்கும் போகாதவன். காலையில் புறப்பட்டு கடமைக்கு வந்தால் ஒழுங்காக செயலாற்றிவிட்டுத்தான் பத்து நிமிடங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வெடுப்பேன். சில ஆசிரியர்களைப்போல அரசியலையும் அன்றாட நாட்டு நடப்பையும் அலசுகின்றவனல்ல நான்.

நேரம்கிடைத்தால் நல்ல புத்தகங்களைப்படிப்பேன். எல்லோரும் போய்விட்டார்கள். அதிபர் அனிபாவின் அறைக்குள் புகுந்தேன்.

"வாங்க பஸீர்! உக்காருங்க. நம்ம ஊர் பிள்ளைகளின்ட கல்விக்கு நாம முடிஞ்சவரை உதவனும். அதற்கு ஆசிரியர்களின் பணி அவசியம்" என்று சொல்லி நிறுத்தினார் அதிபர் அனிபா.

"எப்படிப்பட்ட தீயமாணவர்களையும் நாம சொல்ற விதத்திலேதான் திருத்த முடியும். குறுகிய மனம் கொண்ட ஆசிரியர்களால் நல்ல மாணவனும் சீரழிந்து விடுகிறான்" என்றேன் நான்.

"ஆமா பஸீர் நீங்க சொல்ற உண்மை. நான் சொல்ல வாற முக்தார் மாஸ்டரைப்பற்றித்தான். ஆசிரியர்களோடு நல்லாப் பழகிறதுமில்லை. மாணவர்களோட பண்பாகப் பழகுறதுமில்ல. ஒழுங்காகப் படிப்பிக்கிறதுமில்ல. மாணவர்களிடத்திலே கீழ்த்தரமாகப் பேசுகிறான். இப்படிப்பட்டவர்கள் பட்டதாரிகளாக இருக்கிறதிலே யாருக்கு என்ன இலாபம்? நம்ம மாணவர்கள்ள நன்மைக்காக அவருக்குத் தெரியாம கல்வி அதிகாரிக்கு சொல்லி அவருக்கு இடமாற்றம் கொடுப்போம். என்ன சொல்றீங்க பஸீர்" அதிபர் அனிபா சொன்னார்.

"சரீனா டீச்சரை லவ் பண்ணுறானாம். கல்யானம் விரைவில் முடிக்கப்போறானாம். அதனாலே சேர் கொஞ்சம் வோர்ன் பண்ணி வைங்க அடங்கல்லண்ணா ரான்ஸர் கொடுப்பம்" என்றேன் நான்.

"அது சரி பஸீர். நாளைக்கு வரட்டும் வோர்ன் பண்ணிவைக்கிறேன்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
15651

என்றார் அதிபர் அனிபா. நான் வீட்டுக்குச் செல்ல வெளிக்கிட்டேன்.

'சமூகத்துக்கு முன்மாதிரியா இருக்க வேண்டியவர்கள் ஆசிரியர்கள். முக்தாரைப் போன்று ஆசிரியர்களும் இருக்கின்றார்களே...! இவர்களால் யாருக்கு என்ன பயன் என்றெண்ணியவாறு வீட்டை அடைந்தேன்.

உடைகளை மாற்றிவிட்டு சோபாவில் சாய்ந்து சிந்தித்தேன்.

"யோசனை பலமா இரிக்கு, ஸ்கூல்ல ஏதும் பிரச்சினையா?" கேட்டுக்கொண்டே அருகே வந்து அமர்ந்தாள் என் அன்பு மனைவி மும்தாஜ்.

"பிரச்சினை ஒன்றுமில்லே. முக்தார் மாஸ்டராலதான் எல்லோருக்கும் பிரச்சினையா இரிக்கு. ஒழுங்கா படிப்பிக்கிறதும் இல்லே. பிள்ளைகளுட்ட கூட கேவலமா பேசுறான். மத்தவங்களை நாயைவிடக் கேவலமாக நெனக்கிறான். யாருக்கிட்டேயும் பண்பாக பழகுகிறானில்லை. பிரின்ஸிபலும் நாளைக்கு அவனை எச்சரிக்கை செய்யப்போறார். சரிவராட்டி அவரு ரான்ஸரிலே போகவரும். சரீனா டீச்சரிட்ட மட்டும் இனிக்க இனிக்க பேசுறான்" என்றேன் நான்.

"ஓ... ஓ... அந்த சரீனா டீச்சர் கெடந்த கெடைக்கு கெம்பசிலே இருந்து வந்தாப்பிறகு என்ன நடப்பு. என்ன மினுக்கு. போடியார்ர புள்ளைபோல நெனப்பு. மாப்பிள்ளை எடுக்க சீதனம் இல்லா விட்டாலும் கெம்பஸிக்கு போனதாலே முக்தாரை வசைச்சுப் போட்டாள். என்புள்ளைக்கு பட்டதாரி மாப்புள்ளை கிடைக்கப் போகுது. என்று அவ உம்மா பெருமையா சொல்றா" என்றாள் என் மனைவி மும்தாஜ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
நகர சபை
கல்முனை



அதன் பிறகுதான் சரீனா - முக்தார் காதல் நாடகம் கல்லூரியில் நடக்கிறது என்று நம்பினேன்.

எல்லோருக்கும் இவர்களின் காதல் நாடகம் தெரியவந்தது. அடிக்கடி சரீனாவின் வீட்டுக்கு போய்வரத் தொடங்கினான் முக்தார். அவன் காலையில் சரீனாவின் வீட்டுக்கு போனால் பகல் சாப்பிட்டு மாலையில்தான் தன் வீட்டுக்குப் போவான். மாலையில் சரீனாவின் வீட்டுக்குப் போனால் இரவில் நின்று இன்பமாக பொழுதை கடத்திவிட்டு காலையில்தான் அவனின் வீட்டுக்குப்போவான். உறவு முற்றியதால் ஊரெல்லாம் பற்பல கதைகள்!

"விரைவில் கலியாணம் முடிக்கப் போறானாம்" என்று மீண்டும் ஒரு போடுபோட்டாள் என்மனைவி மும்தாஜ்.

"ஏழைக்குமர் பாவம் கலியானம் முடியட்டும். ஆனா... பக்கத்து வீட்டானோடையும் நல்லாயிருக்க மாட்டான். சண்டைக்காரன் - சண்டைக்காரன்தான்" என்றேன் நான்.

"வாங்க சாப்பிடுவோம் என்று மனைவி அழைத்தாள். சாப்பிட உட்கார்ந்தேன். கறிவைத்திருந்த பாத்திரத்தை அவள் திறக்கவில்லை.

"என்ன செய்வது? நல்லகறி அகப்படவில்லை. உங்களுக்கு விருப்பமில்லாத கறிதான் சாப்பிடுங்க" என்றாள் மனைவி மும்தாஜ். என்மனம் சற்று வாட்டமுற்றதை மனைவி கண்டுகொண்டாள்.

உடனே கறிவைத்திருந்த பாத்திரத்தைத் திறந்தாள் உடனே கரண்டியைப் போட்டு கறியை எடுத்து என் பீங்கானில் வைத்தாள். சுவை நிறைந்த என் விருப்புக்குரிய விரால் மீன்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் சிரிக்க முதல் என்மனைவியே சிரிக்கத் தொடங்கினாள். சிலவேளைகளில் மிகச் சிறப்பாக நகைச் சுவையாக நடந்து கொள்வாள்.

அதிபர் அனிபாவுக்கு முன்னர் பாடசாலைக்கு சென்றுவிடும் பழக்கம் கொண்டவன் நான். அன்றும் நான்தான் முதல் போயிருந்தேன். அடுத்து அதிபர் வந்து அறையை திறந்துவிட்டு என்னைக் கைகாட்டி அழைத்தார்.

'ஸலாம்' சொல்லிக்கொண்டு அதிபரின் அறைக்குள் புகுந்தேன். அதிபருக்கு முன்னாலுள்ள நாற்காலியில் அமர்ந்தேன்.

"முக்தார் மாஸ்டர் கீழ்த்தரமான லவ் பண்ணிக்கிட்டிருக்கான். ஊரிலே எல்லோரும் இதைத்தான் கேட்கிறாங்க. வயசு வந்தா... கலியாணம் தேவைதான். முடிக்க வேண்டியதுதானே. கல்யாணத்தச் செய்யாம சரீனா டீச்சரோட டூயட் பாடுறானாம். கூத்தும் கும்மாள மும்தானாம். நமக்கே வெக்கமாயிருக்கு! அங்க தின்டு படுத்து இரிக்க அவனுக்கு வெட்கமாயில்லை? ஆசிரியர் என்டா கௌரவமா நடக்கனும். முக்தார் மாஸ்டர் கௌரவத்தை காற்றில் விட்டவனாக இருக்கான்" என்றார் அதிபர் அனிபா.

"எங்கேயும் போகாத என்மனைவிக்கே விஷயம் தெரியும் என்டா பாருங்களேன். ரோட்டிலே கண்டவன் நின்டவன் எல்லாம் கேட்கிறா னுகள். பக்கத்து வீட்டுக்காரனுகள் கேவலமா கதைக்கிறானுகள்" என்றேன் நான்.

"பஸீர் இவனுக்கு மானம் ரோசம் இல்லைபோல இரிக்கு. இந்த ஊரிலே பிறக்காத முக்தாருக்கு சரீனாவின் குடும்பத்தைப் பற்றி என்ன தெரியப்போகுது? அவட உம்மா எவ்வளவு கேவலமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



நடந்தா வேலைக்காரனையே படுக்கைக்கு வைத்துக்கொண்ட பச்சை வேசை. அந்த கதை நமக்கு தேவல்ல. அவன் எக்கேடாலும் கெட்டுப் போகட்டும். நாம் மாணவர்கள் நலத்துக்கு பாடுபடணும். முக்தார் வரட்டும். நீங்களும் இருந்து கொள்ளுங்க" என்றார் அதிபர் அனிபா..

அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க அவரது அறையிலே உட்கார்ந்திருந்தேன்.

பத்துநிமிடங்கள் தாமதித்து வந்திருந்தார் முக்தார். அதிபர் அறைக்கு வெளியே வந்து கைதட்டி வருமாறு அழைத்தார். உடன் வராமல் வருவதாக சைகை காட்டிவிட்டு ஒரு மாணவனிடம் ஏதோ கதைத்துக்கொண்டிருந்தார் முக்தார் ஆசிரியர்.

பல்லைக்கடித்துக்கொண்டு முக்தாரின் வருகையை எதிர்பார்த்தி ருந்தார் அதிபர் அனிபா. இடையில் ஒரு சாட்சியாக இருந்தேன் நான்.

"என்ன சேர் வந்து சேரமுதல் கூப்பிடுறீங்க" என்று கேட்டவாறு வந்தார் முக்தார்.

"தேவையென்றா எந்தநேரம் என்டாலும் பேசத்தானே வேணும்" என்றார் அதிபர்.

"நாங்களும் சுதந்திரப்பிறவிகள்தான். நேரம் காலம் பார்த்து கூப்பிடனும்" என்றார் முக்தார்.

"விஷயத்துக்கு வருவம் சேர் கதையை விடுவம்" என்றேன் நான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முக்தார் நான் உங்களை கூப்பிட்ட பிந்திவாறதுபற்றி கதைக்கிறதுக்கல்ல. முக்கியமான விஷயம் பற்றி பேச" என்று நிறுத்தினார் அதிபர்.

பதற்றத்துடன் பிதுங்கினான் முக்தார் "என்னென்றாலும் வந்ததும் வராததுமாக கூப்பிடணுமா? ஆறுதலாக கூப்பிடலாம்தானே" என்று கூறி அதிபரை கழுகுக்கண்களால் நோக்கினான்முக்தார். அவன் பார்த்தவிதம் எனக்கே பிடிக்கவில்லை.

"நாம ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் அதிபர் கூப்பிட அதிகாரம் இருக்கு" என்று நான் சொன்னேன்.

என்னையும் ஒரு அலட்சியப்பார்வை பார்த்தான் முக்தார்.ஒரு ஆசிரியர் எப்படியான மனநிலையில் இருக்கவேண்டும் என்பதற்கு எதிர்மாறான நிலையில் இருந்தான் அவன். அவனைவிட அனுபவசாலிகள், பேராசிரியர்கள், பெரும்பதவியில் இருப்பவர்கள் எல்லோரையும் இழிவாக நினைப்பான். அவனுக்கு அவன் மட்டும்தான் உயர்வு. முட்டாள்களின் எண்ணம் முழுமையாக அவனுக்குண்டு.

"நான் உன் வாப்பாவின் வயசுக்கு வந்தவன் முக்தார். நீ சாதாரண பி.ஏ.தான். நான் எம்.ஏ முடிச்சவன். நீ ஆசிரிய தொழிலுக்கு வந்து ரெண்டு வருஷங்கள்தான். நான் இருபது வருடங்களாக தொழில்பார்த்தவன். மனிதனுக்கு முக்கிய அணிகலன் அடக்கம்". என்றார் அதிபர் அனிபா.

அதிபரின் பேச்சுக்களால் வாய்மூடி நின்றான் முக்தார்.

"முக்தார் இதிலே இருங்க" நாற்காலியை சுட்டிக்காட்டினார் அதிபர் அனிபா. எனக்கு பக்கத்தில் அமர்ந்தான் முக்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாணவர்களை நற்பிரஜைகளாக மாற்றுவது நம்கடமை. தீயவர்களையும் நல்லவர்களாக்குவது நம் தொழிலின் பெறுபேறு. சிறு பிள்ளைகளிடத்தில் மென்மையாக காரமற்று பேசணும்.நீங்க சில. பிள்ளைகளிடத்தில் வாப்பாவை தெரியாத பிள்ளைகள். கீழ்த்தரமான குடும்பத்து பிள்ளைகள். வாடா போடா என்று பேசுவதை விட்டிடணும். மரியாதையா பணிவாக பேசுங்க. நீங்க ஆசிரியர்களோட பேசாமஇருக்கலாம். அது உங்கட சொந்த விஷயம். மாணவர்களோடு பண்பாக பழகுங்க" என்றார் அதிபர் அனிபா.

"பேசாமல் கேட்டுக்கொண்டிருந்த முக்தார் பிள்ளைகளுக்கு ஏசித்தானே படிப்பிக்கவேணும். அப்பதானே ஒரு சில பிள்ளைகளுக்கு ஏறுது" என்றார்.

"ஏசனும்' என்பதற்காக தாய், தகப்பன் குடும்பம் கோத்திரம் என்று இழிவாக மனம் வேதனைப்படும்படியாக பேசக்கூடாது. முக்தார் நான் உனக்கு ஆசிரியருக்கு சமன். அப்படி ஏசிப்படிப்பிச்ச காலம் பெயித்து. பண்பான முறையிலே சொல்லுங்க. முடியாத போது அடியுங்க. கீழ்த்தரமான வார்த்தை பேசாதீங்க. இனி உங்களை கூப்பிட்டு சொல்லமாட்டேன் வேறு நடவடிக்கைதான் எடுப்பேன். சரிதானே பஸீர் மாஸ்டர்" அதிபர் கூறிவிட்டு என்னைக் கேட்டார்.

நான் எதுவும் கூறாமல் தலையை மட்டும் ஆட்டிக்கொண்டேன் .

முக்தார் எதுவும் பேசாமல் அதிபரின் அறையைவிட்டு வெளியிறங்கி வகுப்பறைக்குள் புகுந்தார்.

ஆறாம் வகுப்பிற்குள் கணித பாடம் போதித்தார் முக்தார். அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பிற்கும் முறையை சகல ஆசிரியர்களும் கண்காணிக்க தொடங்கினார்கள்.

முக்தார் படிப்பிக்கும் வகுப்பிற்கு அடுத்த வகுப்பில் படிப்பிக்கும் ஆசிரியர்கள் முக்தாரின் உரையையும் செவிமடுப்பார்கள்.

அதிபரும் முடிந்தவரை முக்தாரை பரீட்சித்தார்.

முக்தாரின் வசனங்களும், சொற்களும் மரியாதைக்குறைவாகவே நிகழ்ந்தன. இனி முக்தாரை திருத்த முடியாது. அவன் தீயசூழலில் வளர்ந்தவனாக இருக்கிறான் என்ற உண்மையையும் அறிந்து கொண்டார்.

கல்விப்பணிப்பாளரிடம், முக்தாரை உடனடியாக வேறு பாடசாலைக்கு மாற்றும்படி கட்டளை இட்டிருந்தார் அதிபர். கல்விப் பணிப்பாளரும் செய்வதாக வாக்களித்திருந்தார்.

நாட்கள் நகர்ந்தன. சரீனாவை திருமணம் செய்வதாக தீர்மானித்திருந்தான் முக்தார். அடுத்தமாதம் நாள் குறிப்பதாக முடிவு செய்திருந்தார்கள். ஆனால் இந்தமாதமே கல்முனைக்கு இடம்மாறிச் செல்வதற்கான கடிதம் வந்திருந்தது. உடனடி இடமாற்றம்.

ஒன்றும் செய்யமுடியாத முக்தார் வேதனையோடு வெளிக்கிட்டான். எவரோடும் எதுவும் பேசவில்லை. சரீனாவைத்தவிர!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகர்
நகர
க

# தெருவோர தேவதை

பொன்னம்மாக் கிழவி கொஞ்ச நேரமாவது சும்மா இருக்கமாட்டாள். சும்மா இருந்தாலும் அவளது வாய் ஓய்வின்றி இயங்கும்.

பக்கத்து வீட்டில் ஏதாவது சமாச்சாரம் கிடைத்து விட்டால் போதும். இருள்பட்டு உறங்கும் வரையும் அதுதான் கதை அவளுக்கு. தெருவால் போவோரையும் நிற்கச் சொல்லி கதைப்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது வீட்டுக்கு அடுத்தவீட்டுக்கு எதிர் வீடு அவள் வீடு. வேலைக்கு போய்வந்து சிறிது நேரம் களைப்பை போக்க தெருப்பக்கம் வந்து நிற்பேன்.

பொன்னம்மா யாருடனாவது எதையும் சொல்லிக் கொண்டிருப்பாள். அன்றும் வழமைபோல தெருப்பக்கம் வந்தேன். யாரும் பொன்னம்மா கிழவிக்கு கிடைக்கவில்லை போலும்.

“மகன் ஜெகன்.. இப்பதானே வந்தீங்க” என்று கேட்டவாறு என்னருகே வந்து நின்றாள். இன்டர் நெட்டில் பல செய்திகள் பொன்னம்மா கிழவிக்கு கிடைத்து விட்டன போலும் என்று நினைத்துக் கொண்டேன்.

“இங்க பாரு மகன் கனகசபையிர மகள் ராணி ராசையாவோட மகன் பாண்டியனோட ஓடிட்டாளாம். என்ன கெட்டவளப்பா! அவள் ஓடினாப் பரவாயில்லே. ஆனா சொந்த சித்திர மகன் அண்ணன் முறை. பணம் இரிக்கெண்டு பார்த்திருந்தா சரியா! உரிய வயசு வந்தா மகள் மாருக்கு கல்யாணத்தை முடிச்சி வைக்கிறானே” என்றாள் பொன்னம்மா.

எனக்கு கோபம் வந்தது. “யாரும் யாரோடு ஓடினால் உனக்கு என்ன?” என்று கேட்கவேண்டும் போலிருந்தது! ஏன் வீணாக அவளுடன் மனஸ்தாபப்படவேண்டும் என்று நிறுத்திக் கொண்டேன்.

பொன்னம்மா கிழவியின் பொடுபொடு வாய் கிடுகிடுக்கவே செய்தது. அப்படி ஓய்வு ஒழிச்சல் இன்றி பேசுவதற்கு இந்ததள்ளாத வயதிலும் முடிகிறதே என்று பெருமூச்சு விட்டுக்கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



"ராணியோட வீட்டில தனிய இருந்து பேசுவானாம் பாண்டியன். இதைப்பத்தி பெற்றோரும் ஒன்டும் சொல்லாம இரிப்பாங்களாம். எத்தனை பேரு கண்ணால கண்டவங்க இரிக்காங்க" பொன்னம்மா சொன்னாள்.

"சகோதர முறையுள்ளவங்க பேசினா யார்தான் சந்தேகப்படுவாங்க? இப்படி ஆகுமென்டு யாருக்கு தெரியும்?" என்றேன் நான்.

"சரிதான் நீ சொல்ற! இப்ப காலம் கெட்டுப் போச்சுடா ஜெகன். ஊரை விட்டு ஓடிப்போய் கல்யாணம் முடிச்சவங்க எத்தனைபேர் ஊருக்கு வந்து வாழ்றாங்க! இன்னும் ரெண்டுமாசத்திலே ராணியும் பாண்டியனும் புருஷனும் பொண்டாட்டியுமாக வருவாங்க. பெற்றோரும் வரவேற்று சொத்து சுகங்களையும் கொடுப்பாங்க. இப்படி எத்தனைய பார்த்திட்டம்" என்றாள் பொன்னம்மா கிழவி.

இவள் மற்றவங்களின் விஷயத்தை ஏன் இப்படி அலசுகிறாள்? பொன்னம்மா கெட்ட சூழலில் வளர்ந்திருக்கிறாள் என்பது தெளிவாகிறது என நினைத்துக் கொண்டேன். இன்னும் நின்றால் மேலும் கதைப்பாள் என்று

"இப்பதான்! வந்தே மேல் கழுவப்போகிறேன் "என்று கூறி வீட்டிற்குள்ளே வந்து விட்டேன். இப்போது இன்னொரு பெண்ணோடு சத்தமாக பொன்னம்மா பேசுவது கேட்டது.

அவளுக்கு சாப்பாடு இல்லாவிட்டாலும் ஊரில் நல்லது கெட்டது நடக்க வேண்டும். அப்போதுதான் பொன்னம்மாவுக்கு பொழுதுபோகும். அவள் மற்றவர்களின் விஷயங்களை அலசிப்பார்க்கின்றாள். தன்னை நினைத்துப் பார்க்கிறாள் இல்லயே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் மனம் அவளைப்பற்றி அலசத்தொடங்கியது. அவளது கணவன் முத்துலிங்கம் அவளோடு மிக அன்பாக இருந்தான். அவளுக்கு குறைஏதும் வைக்காமல் மனம் குளிர நடந்தான். அவள் பெற்ற பெண் பிள்ளை இரண்டுக்கும் வீடுகட்டி, பொருள்சேர்த்து சீதனம் கொடுத்து திருமணமும் செய்து வைத்தான். பொன்னம்மா கணவனால் துக்கத்தையே கண்டிருக்கமாட்டாள். அப்படி இருந்தும் தேவை இல்லாமல் ஊர்க்கதைகள் பேசி திரிவாள்.

இது நல்லவர்களுக்கு பிடிக்காத ஒன்று எப்படி கணவன் முத்துலிங்கத்திற்கு பிடிக்கப்போகின்றது? பலமுறை பணிவாக சொன்னான்.

"மற்றவர்களை நாம் இழிவாக பேசக் கூடாது. அவர்கள் எப்படி நடந்தா நமக்கு என்ன? அவர்கள் அப்படி நடப்பதும் ஒன்று நீங்க பேசுவதும் ஒன்று. விட்டுப் போடுங்க" என்றான் முத்துலிங்கம் அவள் கோட்டால்தானே! நிம்மதியாக கவலையின்றி வாழ்ந்த பொன்னம்மாவிற்கு நிறைவேறாத ஆசை என்று ஏதுமில்லை.

பெண் பிள்ளைகள்கூட கணவனும் குடும்பமுமாக இருக்கின்ற போது அவளுக்கு என்ன கவலை? இனித்தேவை ஒரு பிடி உணவுதானே! அதை பெண்பிள்ளைகள் தரும்.

"கதைத்து திரிந்து பொழுதுபோக்க கணவன் தடையாக இருக்கிறார். வாழும்வரை வாழ்ந்துவிட்டேன். இனி கணவன் தேவை இல்லை. அவரை போய்விடுமாறு கூற வேண்டியதுதான்" என நினைத்தாள் பொன்னம்மா

தேவை நிறைவேறியபின் ஆண்களை புறக்கணிக்கும் பெண்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவளும் ஒருத்தி என நினைக்க பொன்னம்மா மீது எனக்கும் வெறுப்பு வந்தது.

கணவனை கடிந்து வீட்டைவிட்டு வெளியிறக்கிவிட்டாள். கணவன் சகோதரி ஒருத்தியின் வீட்டில் தனியாக இருக்கிறான்.

இப்போது சுதந்திரமாக கதைத்து பொழுது போக்குகிறாள் பொன்னம்மா. அதன் விரிவாக்கம்தான் தற்போதைய நிலை!

அன்பாக பழகி அன்பாக நடந்து உயிரைக் கொடுத்து காப்பாற்றிய அன்புக்கணவனை மறந்து பிரிந்திருக்க நினைக்கும் பெண் எப்படிப்பட்டவளாக இருப்பாள் என்பதை நானும் நினைத்துப் பார்க்கிறேன்.

பாசம் துளியும் இல்லாத பெண்ணாக இருப்பாள். இப்படிப்பட்ட கிழவி பொன்னம்மா குடி இருக்கும் பகுதியில் நானும் இருப்பது பெரும் அவமானம் என்று நினைத்துக் கொண்டேன்.

இரவு படுக்கைக்கு செல்லும்போதும் பொன்னம்மா கிழவியின் சத்தம் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

வேலையற்ற இளைஞர்களுக்கும் வயோதிப பெண்களுக்கும் பொன்னம்மாவின் பிரசங்கத்தில் விருப்பம் இருந்தது. அவள் பேசுவதை மௌனமாக கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

ஒரு வாரம் கடந்தது.

பொன்னம்மாவின் வீட்டு வீதியால் ராகவன் நடந்து வந்தான். பொன்னம்மா ராகவனை கண்டு வீதிக்கு வந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சொகமா இரிக்கியா ராகவன்” கேட்டாள் பொன்னம்மா.

“ஓம் மாமி நல்லசுகம். நீங்க செய்த வேலை மிச்சம் பிழையான வேலை மாமி” என்றான் ராகவன். எதையும் எவரிடமும் துணிந்து கூறுவான் ராகவன். நல்லதை பாராட்டுவான். தீயதை எதிர்ப்பான்.

“என்ன மகன் என்னை பிழையா சொல்லுற?” விளக்கம் தெரியாமல் கூறினாள் பொன்னம்மா.

“இவ்வளவு காலமும் நீங்க கவலையில்லாம வாழ்ந்ததுக்கு, உங்க பெண்பிள்ளைகள் மூவரும் திருணம் செஞ்சி சந்தோஷமாக வாழ்றதுக்கு காரணமான உங்க கணவனை துரத்திவிட்டது எவ்வளவு நன்றிகெட்ட செயல். அவர் உங்களுக்கு என்ன அநியாயம் செய்தார்?” என்றான் ராகவன்

“அவர் எதுவும் செய்யல்லத்தான். ஆனா மனிசன் மக்களோட ஊர் உலகத்தைப்பற்றி பேசிக்கொண்டிருக்க விடுறாரு இல்லை என் சுதந்திரத்துக்கு அவர் தடையானா அவர் என்னத்துக்கு?” என்றாள் பொன்னம்மா கிழவி.

“என்ன மடத்தனமான போக்கு மிக மோசமான செயல்தானே? நீங்க மத்தவங்களைப் பத்தி பேசிக் கொண்டிருக்கிற! உங்க கணவன் மிச்சம் நல்லவரு. அதுதான் தடுத்திருக்கிறார்” என்றான் ராகவன்.

வாயடைத்து நின்றாள் பொன்னம்மா கிழவி. இவளுடன் கதைத்து நிற்பதால் தனக்கும் கெட்ட பெயர் வருமென்று நகர்ந்து சென்றான் ராகவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சாகும் வயது வந்தும் என்ன அட்டகாசம்! ஊர் எப்படி போனால் உனக்கு என்ன? சாகின்ற காலத்தில் சாப்பிட்டுக் கொண்டு கடவுளை வணங்கி காலத்தை போக்க வேண்டியது தானே. இப்படியான பெண்கள் விரைவில் இறக்கமாட்டார்கள். இழுபட்டு துடிதுடித்து இருப்பார்கள்' என நினைத்து துயருற்றான் ராகவன். பொன்னம்மா கிழவிக்கு இதைப்பற்றி கவலையில்லை!

"நாட்டிலே எவ்வளவோ அநியாயங்கள் நடக்குது. அதுகளை பேசுறன். பேசினா என்ன? நான் வெரசிவிட்ட புருஷண்ட கொள்கை போலதான் இவனுக்கும் இரிக்கி. யார் என்ன பேசினா எனக்கென்ன? என்ர வாய்க்கு பூட்டுபோட யாருக்கும் முடியா?" என்று விகார நினைவுடன் முன்புறத்தால் யாரும் வருகின்றார்களா என்று பாதையை நோக்கினாள் பொன்னம்மா கிழவி.

நான் வெளிக்கதவருகே நிற்பதை கண்டு கொண்டாள்.

என்னை போகவிடாமல் மூச்சுவிடாது கதைப்பாள் என்று தெரிந்து அவளை பார்க்கதாவன் போல கதவை சாத்திவிட்டு வந்தேன்.

மனதால் என்னை திட்டி இருப்பாள் என்று நினைக்கிறேன். பொன்னம்மா கிழவி முணுமுணுப்பது கேட்டது.

நேற்று அவள் என்னிடம் சொன்ன கதைக்குப்பிறகு முகம் கொடுப்பதில்லையென முடிவெடுத்துக் கொண்டேன்.

என் ஆருயிர் நண்பன் சிவப்பிரகாசம் என்னை கீழ்த்தரமாக பேசினானாம் என்று என்னிடம் சொன்னாள். உயிர் நட்பை பிரிக்க உலை வைக்கப்போகின்றாள் என்று நினைத்துக் கொண்டேன். மேற்கில் சூரியன் உதிக்கப்போகிறது என்று சொன்னால் எப்படி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்புவேன்? எனக்கு யாரும் ஏசினாலும் பல்லை உடைத்து விடுவான் சிவப்பிரகாசம் அப்படி உயிர் நண்பன்.

எங்கள் நாட்பை உணர்ந்து பிரிக்கத்தான் பொன்னம்மா கிழவி சொல்கிறாள் என்பதை தெரிந்து எதுவும் பேசவில்லை.. பெருத்த ஏமாற்றமாகி விட்டது பொன்னம்மாவுக்கு.

முன்வீடு என்று முகம் கொடுத்த எனக்கே சதி செய்ய நினைத்தபின் பொன்னம்மாவின் உறவு தேவை இல்லையென்று முடிவெடுத்துக் கொண்டேன்.

நான் வேலைக்கு போனநாட்களில் மனைவியோடு இருந்து மகாநாடே நடத்துவாளாம் மனைவி வீட்டைவிட்டு ஓடமுடியுமா? பேசாமல் தலையை ஆட்டிக் கொண்டிருப்பாளாம்.

மனைவிக்கே பொன்னம்மாவின் பேச்சு அலுத்துவிட்டது.

"நீங்க வேலைக்கு போனா நான் இனி வெளிக்கேற்ற மூடிட்டு இரிப்பன்" என்றாள்.

அதுவே நல்லமுடிவென நானும் ஆதரவு தெரிவித்துக் கொண்டேன். என் வீட்டுப்பக்கம் பொன்னம்மா கிழவி தலைகாட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. இனி மற்றவர்களிடத்தில் எங்களையும் குறையாக பேசலாம். யார் என்ன பேசினாலும் எனக்கு கவலை இல்லை. மனச்சாட்சிக்கு இடமளிப்பவன் நான்.

பொன்னம்மா தெருவோரம் நின்று கொண்டாள். அதுதானே அவளின் பொழுதுபோக்கு தரிப்பிடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'யார் வருவர் என்னருகே கதைகேட்க' என்பது போலிருந்தது அவளது பார்வை.

ராசையா என்ற முதியவர் பொன்னம்மா அருகே சென்றார். அவர் முதியவராக இருந்தாலும் இளமை எண்ணங்களில் இன்னும் இறங்கி மகிழ்பவர். பெண்களைக் கண்டால் மோகவார்த்தை பேசி முத்தமிடவும் நினைப்பவர் 'கதை பேச்சுத்தானே' கெட்ட செயல் இல்லையே என்றுதான் அனேகர் நம்பி இருந்தார்கள். திரை மறைவில் நிகழ்பவை ஒரு நாள்தானே வெளியே தெரியவரும்.

"ராமையா! உனக்கு என்ன தெரியும் ஐயா. நாடுபோறபோக்கு எல்லாம் அழிவின் நோக்கு" என்றாள் பொன்னம்மா.

"வயசு என்ன வயசு இன்னும் பொன்னம்மாவின் உடம்பு பொளுபொளுண்ணு இருக்கி. எண்பது வயசிலயும் வெள்ளைக்காரி புள்ளப்பெக்காள். உனக்கு என்ன அறுபதும் இல்லையே! என்ன உசாராவும் இரிக்காய் எப்படி புருஷன விட்டுப் போட்டு இரிக்காய்" என்றார் ராமையா.

"அவருக்கு அதை இதை பேசி திரியிற புடிக்கிறல்லே. என்னை பலதரம் எச்சரித்தார், ஏசினார். நான் போ எண்டு துரத்திற்றன். எனக்கு இனி அந்த இந்த ஆசையெல்லாம். கிடையா" என்றார் பொன்னம்மா

ராமையா தனது கழுகுக்கண்களால் பொன்னம்மாவின் முந்தானை சரிந்து முன்னுக்கு பெருத்து தெரிந்த மார்புகளை ரசித்துக் கொண்டார்? இதை பொன்னம்மா பொருட்படுத்தவில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமையாவின் மனதில் திடீரென திட்டமொன்று உருவானது.

"பொன்னம்மா சரியான தண்ணி தாகமா இரிக்கு. வா உன்ட ஊட்ட வந்து தண்ணி கொஞ்சம் எடுத்து தா." என்று கேட்ட ராமையா பொன்னம்மாவை பின்தொடர்ந்தார்.

அவர் வெளிவிறாந்தையில் நின்று கொண்டார். பொன்னம்மா வரவேற்பறை கதவை திறந்து விட்டாள். நாற்காலி ஒன்றில் அமர்ந்தார் ராமையா.

தண்ணீர் பாத்திரத்தை ராமையாவிடம் கொடுத்தாள். வாங்கி ஓரளவு பருகினார்.

"இரு பொன்னம்மா இவடத்தில் இருந்து பேசுவோம்" என்று பக்கத்தில் கிடந்த நாற்காலியை காட்டினார் ராமையா. கதையழகி பொன்னம்மா பொத்தென அமர்ந்தாள்.

உணர்வுளை ஏற்படுத்தக்கூடிய கதைகளை தொடர்ந்தார் ராமையா.

"கனகசபையிர மகள் ராணி அண்ணன் முறையான பாண்டியனோடு ஓடிட்டாளாமே" என்றார்.

"ஓமப்பா.. காலம் கெட்டுப்போச்சு. முறைதலை தெரியல்லியே எங்கட காலத்திலே ஆண்களை ஒழிச்சிருந்துதானே பார்த்தம்" என்றாள் பொன்னம்மா கிழவி.

"அப்ப எத்தனைபேரை ஒழிச்சு பார்த்திருப்பே.." என்று கேட்டார் ராமையா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இளமைக்காலம் அப்படித்தானே! நீங்க என்டாப்போல சும்மா இருந்திருப்பீங்களா?" என்றாள் பொன்னம்மா.

"நீதான் இப்ப சும்மா இருக்காய் என்னால.. ஏலா.." என்று சொன்ன ராமையா எழுந்து பொன்னம்மாவின் கையைப்பிடித்து கன்னத்தில் முத்தமிட்டார்.

"தள்ளிப்போங்க" என்று தட்டிவிட்டாள் பொன்னம்மா. மீண்டும் சென்று கட்டிப்பிடித்தார் அவருக்கு உதைத்துவிட்டு தெருவுக்கு வந்து சத்தம் இட்டாள் பொன்னம்மாகிழவி. ஜனங்கள் கூடுவதற்கு இடையில் வேகமாக நடந்து மறைந்தார் ராமையா.

இருந்தாலும் இந்தக்கதை ஊரெல்லாம் பரவியது. பொன்னம்மா கண், மூக்கு வைத்து கதைத்து வந்தவள் அல்லவா!

"ராமையா எத்தனையோ விதவைகளின் வீடுகளுக்கு சென்று விருந்துண்டவன் அல்லவா! பொன்னம்மாவையும் ருசி பார்த்துவிட்டான்" என்று பலர் பேசிக் கொண்டார்கள்.

பொன்னம்மாவின் காதிலும் இது விழத்தான் செய்தது! வெட்கித்தாள், வேதனையுற்றாள், 'கணவன் என்று ஒருவன் இருந்திருந்தால் இந்த கயவர்கள் வருவார்களா?' என ஏங்கித்தவித்தாள்.

துரத்திவிடப்பட்ட கணவனின் காலில் விழுந்தாலும் அவன் திரும்பி வரப்போவதில்லையே! இனி அழுது என்னபயன்? முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்!

(நவமணி 21.01.2000).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
R 15651

## துடுப்பில்லாத தோணிகள்

நான் மட்டுமா சவூதிக்கு வந்தேன்? என் வீட்டுக்கு அடுத்த வீட்டுக்காரியின் மகளும் சவூதியில்தான் இருக்கின்றாள்.

சவூதி பொஸ்ஸோடு வீட்டுப்பாவனை பொருள் வாங்க சென்றிருந்தேன். அவளும் அவளது பொஸ்ஸோடு வந்திருந்தாள். அதிகம் பேசிக் கொள்ள நேரம் இருக்கவில்லை அவள் இருக்கும் தெருவை கேட்டுத்தெரிந்து கொண்டேன். விடுமுறையில் ஒருநாள் சென்று பார்க்க வேண்டும் என்ற நோக்குடன்!

ஏழைப் பெண்களை வறுமைதான் சவூதிக்கு இறக்குமதியாக் குகின்றன. ஏனோ.. சவூதியில் குடி இருக்க வந்தவர்கள் போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் பலர் நினைக்கின்றார்கள்! எனக்கு இன்னும் இரண்டு தங்கைகள் இருக்கின்றார்கள். திருமண வயதுக்கு வந்தவர்கள். நான் தான் மூத்தவள், தந்தை இருமி இருமி படுத்தபடுக்கையோடு இருந்தவர். எனது பதினாறாவது வயதில் இறந்துவிட்டார்.

அம்மாதான் தாய்க்கு தாயாக தந்தைக்கு தந்தையாக குடும்ப பாரத்தை சுமந்து எப்படியோ இது வரைக்கும் உணவு, உடை தந்து பராமரித்தாள்.

அப்பாவின் காணியை குத்தகைக்கு கொடுத்து வாற பணத்தைச் சேர்த்துத்தான் அம்மா எனக்கு திருமணத்தையும் செய்து வைத்தார். எனக்கு கணவராக வந்தவர் அன்புக்கணவராகத்தான் இருந்தார். என்னோடு உயிரையே வைத்திருந்தார். ஒருவருடம் எங்களது வாழ்க்கை சிறிது சலனமுமின்றி நிம்மதியாக கழிந்தது.

வீட்டைவிட்டு புறப்பட்டு தொழிலுக்கு சென்றுவந்தால் எனக்கு தேவையான ஏதாவது வாங்கி வந்திருப்பார்.

ஒரு மனைவிக்கு தேவையானவற்றை வாங்கிக் கொடுக்கும் கணவன்மாரில் என் கணவனைப்போல ஒருவரை நான் காணவில்லை, அவரைப்போல அன்பானவரையும் காணவில்லை.

குவைட்டுக்கு தொழில் வாய்ப்புபெற்று ஒருவருட ஒப்பந்தத்தில் சென்றார். சென்று ஒரு மாதத்தில் பணமும் கடிதமும் அனுப்பினார். நான் பதில் எழுதியும் போட்டேன். அதன் பிறகு இரண்டரை வருடங்கள் கடந்துவிட்டன. பதிலும் இல்லை, பணமும் இல்லை, இருக்கிறாரா இல்லையா என்பதும் தெரியவில்லை.

என்னை அவர் மறக்கமாட்டார். ஒரு நாள்கூட என்னோடு அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டை பிடித்தவரல்ல. அப்படியானவருக்கு என்ன நடந்தது? என்றுகூட எனக்கு தெரியாது.

வறுமையும் வயிறும் விடுமா? எனது மகளுக்கும் ஐந்து வயதாகிவிட்டது. செலவு வேறு.

வழியின்றி சவூதிக்கு வந்துவிட்டேன். வீட்டுக்கு கடிதம் போடும் போது அவரின் கடிதம் வந்ததா? அல்லது அவர் வந்துவிட்டாரா? என்று கேட்டுக்கேட்டு எழுதுவேன். இல்லை இல்லையென்றே அம்மா பதில் எழுதுவார். பொய்யா எழுத முடியும்?

ஒருநாள் அம்மா எனக்கு விரிவான கடிதம் ஒன்று எழுதி இருந்தார். அதைப்படித்தபின் ஒரு வாரமாக தூக்கமும் இல்லை, பசியும் இருக்கவில்லை என்தலை விதியை நினைத்து வேதனைப்படு வதைத்தவிர வேறு என்ன செய்யமுடியும்? என்னைத் தவிர வேறுஎவரையும் உயிருக்குயிராக நினைத்துப் பார்க்காத உயிர் கணவன் குவைத்தில் மலையகப் பெண்ணொருத்தியை திருமணம் செய்து வாடகை வீடு எடுத்து வாழ்கிறாராம்!

வேலை ஒப்பந்தம் முடிந்த பின் பெண்ணின் பிறந்தகமான மலைநாட்டுக்கு சென்று அவளுடன் வாழப்போகின்றாராம்.

அவரோடு வேலைபார்த்த எங்களூர் சதாசிவம் அம்மாவிடம் சொல்லி இருக்கிறார். இப்படி இன்னொருத்தியை கண்டு மயங்குகின்றவரை உயிருக்கு உயிராக நம்பினேனே! என்னை நட்டாற்றில் விட்டு விட்டு பித்தலாட்டாம் ஆடுகின்றாரே!

எனது வாழ்வுதான் இருண்டுவிட்டது. பரவாயில்லை எனது மகளின் எதிர்காலமும் அல்லவா இருண்டாகிவிட்டது. இவ்விதம் பலதையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



எண்ணிக்கொண்டு நாற்காலியில் அமர்ந்திருந்தேன். அவ்வேளை எனது பொஸ்ஸின் கார் முன்புறம் நிறுத்தப்பட்டது. கதவை திறந்து விட்டு நின்று கொண்டேன். ஒரு வருடத்திற்கு மேலாக உணவும் சம்பளமும் தருகின்ற 'பொஸ்' அல்லவா! மரியாதை செய்யத்தானே வேண்டும்.

வேலையை தலைக்குமேல் கொடுத்து உரிக்கும் பொஸ்களும் இருக்கின்றார்கள். எனது பொஸ் நல்லவர் அளவான வேலை தருவார். சிறப்பாக வேலை செய்தால் பாராட்டுவார்.

சவூதிக்கு போன புதிதில் அவர்கள் பேசும் அறபுமொழி எனக்கு மந்திரமாகத்தான் இருந்தது. போகப்போக ஓரளவு அறிந்து கொண்டேன். இரண்டொரு வசனம் பேசவும் தெரிந்து கொண்டேன்.

பொஸ் கோர்ட்டை கழற்றிவிட்டு சோபாவில் அமர்ந்தார்.

"சாந்தி... ஏசியை போட்டுவிடு" என்று அரபியில் சொன்னார். போட்டுவிட்டு திரும்பினேன். பொஸ்ஸின் மனைவி பெயர் சொல்லி அழைத்தாள். அவளொரு காட்டுமிராண்டி. எடுத்ததெற்கெல்லாம் கோபம் வரும், கொஞ்சம் தாமதித்தால் போதும் முதுகில் குத்துவாள். அந்தக்கை உலக்கைதான். பயத்தில் ஓடினேன்.

'ஐயா வந்திட்டாரு அல்லவா! பத்து நிமிஷத்தாலே சாப்பிட வருவாரு. மேசையை கிளீன் பண்ணு. பாத்திரங்களை கழுவித்தா" என்றாள். தாமதிக்காமல் இயங்கினேன். கொஞ்சம் தாமதித்தால் ஏசுவாள்; குத்துவாள். எவ்வளவுதான் செத்து செத்து செய்தாலும் ஈவிரக்கம் கொஞ்சமும் காட்டமாட்டாள்.

இன்றைக்கு பின்னேரம் பொஸ்ஸின் அனுமதி பெற்று பக்கத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்காரியின் மகள் சோபனாவை சந்திக்க செல்லவேண்டும். பக்கத்து தெருதான்! அவளும் என்னைப்போல வறுமையால் வந்தவள்தான்! சொந்த நாட்டவரென்றால் மனம் விட்டுப் பேசலாம் அல்லவா!

எல்லோரும் உணவு உண்டபின் என்னை சாப்பிடுமாறு சொன்னார்கள். கடைசியாக சாப்பிட தந்தாலும் அது எம்நாட்டு சாப்பாட்டை விட எவ்வளவோ உயர்த்தியாக இருந்தது. வீட்டில் இப்படி சாப்பிடமாட்டேன். இங்கு ஒவ்வொரு வேளையும் நன்றாக ஒருபிடி பிடிக்கிறேன். சாப்பிட்டு எழும்போது களைப்பாகத்தான் இருக்கும். ஓய்வெடுக்கமுடியாதே! அரைமணி நேரத்திற்குள் குசினியை சுத்தப்படுத்தி முடிக்க வேண்டும். இல்லையானால் பொஸ்ஸின் பூதம் கையை காலை நீட்டிவிடும்.

வேலை முடிந்து குசினியை விட்டு வெளிவரும் போது இரண்டரை மணியாகிவிட்டது.

பொஸ் படுக்கையறைக்குள் புகுந்து அரைமணி நேரம் நகர்ந்திருக்கும். மரம் அறுக்கும் சத்தம் போல அவரின் குறட்டை ஒலி கேட்டது. அவரின் மனைவியும் அவரோடு போய் உறங்கி இருக்க வேண்டும். சீட்டி ஊதுவது போல அவளின் குறட்டை ஒலி கேட்டது.

நான்கு மணிபோல இருவரும் எழுந்து முன் அறைக்கு வந்தார்கள்.

சூடான பானம்தான் அவர்களுக்கு தேவைப்படும். தண்ணீரை சூடாக்கி பால் கோப்பி தயாரித்துக் கொடுத்தேன். புகழ்ந்தவாறு பருகினார் பொஸ். அந்த குண்டோதரிதானே எதுவும சொல்ல மாட்டாள். பேசாமல் பருகினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது தான் தருணம் என்று பொஸ்ஸின் முன்னிலையில் நாணிக்குறுகி வாயை திறந்தேன்.

"எனக்கு ஒரு மணி நேரம் வெளிலே போய் வர தேவை. என்ர பக்கத்துவீட்டுக்காரி அடுத்ததெருவுலே ஒரு வீட்டில நிக்கிறா. போய் பார்த்திட்டு வாரன்" என்றேன்.

"இந்தக் கழுதை யாரோட தொடர்பு வச்சு எங்க பாயப்போகுதோ? விடாதீங்க" என்றாள் பொஸ்ஸின் மனைவி.

"சாந்தி அப்படியானவளல்ல. அவளை நம்பலாம். சாந்தி.. தெரிஞ்ச உங்க நாட்டு ஆண்களோட பேசிராதீங்க.. பிறகு தொடர்பு வந்திரும். நேராக பக்கத்துவீட்டுக் காரிக்கிட்ட மட்டும் பேசிற்று வந்திரணும்" என்று அனுமதி தந்தார் பொஸ். இளகிய மனம்கொண்ட பொஸ் எனக்குக்கிடைத்தது நான் பெற்ற வரம் என்றுதான் சொல்லவேண்டும். சிலபெண்களுக்கு கிடைத்திருக்கிற பொஸ்மாதிரி எனக்கும் கிடைத்திருந்தால் இங்கேயும் கண்ணணீரில்தான் குளிக்கவேண்டி வந்திருக்கும்.

தெருவின் பெயரும் இலக்கமும் தெரிந்தபடியால் வீட்டை கண்டுபிடிக்க எனக்கு சிரமமேற்படவில்லை.

அழைப்பு மணியை அழுத்தியதும் சோபனாதான் வெளிக்கதவை திறந்தாள். என்னைக் கண்டதும் அவளின் முகம் வெளிறி மலர்ச்சியடைந்தது. வெளி நாட்டில் எங்காவது நமது ஊரவர்களைக் கண்டால் ஏற்படுகின்ற சந்தோஷம் இருக்கின்றதே... அதை வார்த்தையில் அடக்கமுடியாது. அந்த சந்தோஷம்தான் எங்கள் இருவருக்கும் ஏற்பட்டது.

பொது நூலகம் நகர சபை கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோபனா என்னை உள்ளே.. அழைத்துப்போனாள். சோபனாவின் பொஸ்ஸாக இருக்கவேண்டும். என்னை விழுங்குமாப்போல பார்த்தான்.

"இவ சிறீலங்கா. என்ர வீட்டுக்கு பக்கத்துவீடு" என்று மட்டும் கூறினாள் சோபனா. அவனது பதிலுக்காக காத்திருக்கவுமில்ல. தாமதிக்கவுமில்லை. என்னை அழைத்துக்கொண்டு அவளது அறைக்குள் வந்தாள். அது வரைக்கும் சோபனாவின் பொஸ் பார்த்த பார்வை இருக்கிறதே அது சுத்தமான காமப்பார்வைதான்! இவனைவிட எனது பொஸ் எவ்வளவோ மேல்.

"என்ன சாந்தி... பதட்டமா இரிக்கிறாய்" என்று கேட்டாள் சோபனா.

"உன்ர பொஸ் பார்த்தபார்வை இரிக்கே அது என்ன பார்வை? பயமே வந்திச்சு. நான் இனி இஞ்ச வாறன்டா அவரில்லா நேரம்தான் வருவேன்" என்றேன் நான்

"அவர் மிச்சம் கெட்டவர்தான்டீ. உனக்கு நல்ல பொஸ் அமைந்தது நல்லகாலம்தான்..! என்ர கதையை கேட்டா நீ கலங்கி போவாய் சாந்தி. நீ பக்கத்து வீடு. உன்னிடம் மனம்விட்டு பேசி என் மனச்சுமையை குறைக்கணும். நான் சில விஷயங்கள் சொல்லப்போறன். ஊரிலே யாருக்கிட்டேயும் சொல்லவேண்டாம் என்ர அம்மாக்கிட்ட கூட சோல்ல வேணாம்" என்று வேண்டினாள் சோபனா.

"சொல்லக்கூடாத விஷயத்தை ஒரு நாளும் யாரிக்கிட்டேயும் சொல்லமாட்டேன்." என்றேன் நான்.

"சாந்தி நீ திருமணம் செய்து ஒரு பிள்ளையும் பெத்தவ. புருஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே போனதும் உன்னை மறந்திட்டான் என்றதையும் கேள்விப்பட்டேன்." என்றாள்

"அவ்வளவுதானா கேள்விப்பட்டாய்?"
"குவைட்ல மலைநாட்டு பெண்ணொருத்தியை மணம்முடிச்சி வாழ்றானாம். சிலோனுக்கு வந்தா மலைநாட்டிலே வாழப் போறானாம்" என்றேன் நான்.

"உயிரையே வச்சதா நடிச்சானே! பெண்டாட்டியோட சண்டை பிடிச்சு வாழ்றவனை நம்பலாம். ஒருபேச்சுமில்லாம திரியிறவனை நம்ப ஏலாதான். உன்வாழ்வும் கடலில் மூழ்கிய படகுபோலதான்" என்று கூறி பெரு மூச்சு விட்டாள் சோபனா.

"ஏதோ சொல்லப்போவதா சொன்னியே! என்ன சோபனா?" நான் கேட்டேன்.

"நான் திருமணமே செய்யாதவள். திருமணம் செய்ய பணம் சேர்க்கத்தான் வந்தேன். ஆனா எனக்கு கிடைச்ச இந்த பொஸ் காமவெறி பிடித்த ஒரு கயவன். மனைவி வீட்டில இல்லாத நேரம் பார்த்து என்னை நெருங்குவான். நான் ஓடிருவேன், சத்தமிடுவேன். விட்டுப்போடுவான். இப்படியே அடிக்கடி நிகழும் நான் அவன்ட எதுக்கும் விட்டுக்கொடுக்கல்ல.

எனக்கு அடிச்சிருக்கான் மார்புல உதைச்சிருக்கான். ஏழையான நான் வெறுங்கையோட வீட்டபோய் என்ன செய்ய என்டுதான் இருக்கேன்.

இப்ப இரண்டுமாசங்களுக்கு முன்ன நடந்த சம்பவத்தை நினைச்சா நெஞ்சு பத்தி எரியிது சாந்தி. அதை எப்படி உனக்கிட்டே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்ல? சொல்லாம இருக்கவும் முடியவில்லை. அதைத்தான் யாருக்கிட்டேயும் சொல்லப்படா என்றேன் கேளு சாந்தி.

பொஸ்ர மனைவி யாரோ உறவினர்ர வீட்ட போய் இருக்காள். பொஸ்தான் அனுப்பி இருக்கணும் வழமையை விட நேரத்தோட பொஸ் வீட்டுக்கு வந்தார். காரை பார்க் பண்ணிட்டு சாரதியை வீட்ட அனுப்பினான். பொஸ்ஸும் நானும் தான் இருந்தோம்.

உறை நீக்கப்பட்ட சொக்லைட்டை என்னிடம் நீட்டி சாப்பிடச் சொன்னார். மற்றதை அவர் சாப்பிட்டார். சொக்லைட்தானே என்று நானும் சாப்பிட்டேன். சொக்லைட் மிகவும் இனிப்பாக இருந்ததினால் தண்ணீரும் பருகிக் கொண்டேன். சில நிமிடங்கள்தான் சென்றிருக்கும். பறப்பது போன்ற உணர்வு, எழும்பி நிற்கவும் முடியல்லே, பொஸ் வந்து என்னை தூக்கினார். தடுப்பதற்கும் சக்தி இருக்கவில்லை.

அவர் உறங்கும் கட்டிலில்தான் என்னை படுக்க போட்டார். கதவை பூட்டினார். அவ்வளவுதான் சாந்தி எனக்குத் தெரியும். கண்ணை விழித்துப்பார்க்கும் போது என்னருகே பொஸ் படுத்திருந்தார். என்னுடம்பில் ஒரு துண்டு துணியும் இருக்கவில்லை. அவரும் அரைகுறை உடையுடன்தான் இருந்தார். என்னை இறுக கட்டிப் பிடித்தவாறு படுத்திருந்தர். அவரது அணைப்பில் இருந்து விடுபட்டேன்.

'எனது தேவை முடிஞ்சு சோபனா' என்றார் பொஸ். எழும்பி தூரத்தே கிடந்த எனது உடைகளை எடுத்தேன். உடைகளை அவர் பறித்துக் கொண்டார்.

'இந்தக் கோலத்தில் உன்னை இரண்டு மணித்தியாலம் பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதுமட்டுமா? இரண்டு முறை உன்னை அனுபவித்தேன். இனி நமக்குள் என்ன வெட்கம்? வெட்கம் இனி இருந்தா உடுத்துக்க' என்று கூறி எனது ஆடைகளை தந்தார். நான் அணிந்து கொண்டேன். கதவைத்திறந்து வெளியே வந்தேன்.

எதுவும் செய்ய முடியாம அழுதழுது இருந்தேன். ஏழையா பொறந்தா வெளிநாட்டிலும் கண்ணீர் தானா சொந்தம்" என்று அழுதாள் சோபனா.

எனது பொஸ்ஸை மனதார புகழ்ந்தேன் "நானென்டா அவனையும் கொலை செய்து நானும் தற்கொலை செய்திருப்பன்" என்றேன் நான்.

"நானும் அப்படித்தான் செய்ய நினைச்செண். தங்கைகளின் வாழ்வுக்காக விட்டு வைச்சன்'' என்றாள் சோபனா.

"இனி நான் அவனில்லாத நேரம் பார்த்துதான் வீட்ட வருவன்" என்றேன் நான்.

"அப்படித்தான் வா.. சாந்தி. திருமணத்துக்கு முன்னேயே கெட்டுவிட்டன். இனி இன்னொருத்தனை ஏமாத்த விரும்பல. ஒவ்வொரு மாசமும் இரு மடங்கு சம்பளம் தாறார். மனைவி இல்லாத நேரம் எனக்கிட்டே வருவார். பட்ட மரமும் கெட்ட பெண்ணும் ஒண்டுதானே..! உள்ளத்தால் விரும்பாமல் அவனுக்கு உடம்மை கொடுப்பேன். வெறி பிடித்த மிருகம்மாதிரி செயல்பட்டு என்னை காயப்படுத்தி இன்பம் அனுபவிச்சு போயிடுவார். என்ன செய்வது? இதுதான் தலைவிதி

ஆனா.. தங்கை வீடு கட்டி முடிந்த செய்தியை அறிஞ்சு மகிழ்ந்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் பொஸ் தந்த பணம்தான். இதை யாரிக்கிட்டேயும் சொல்லாதே சாந்தி என்று கூறி அழத்தொடங்கினாள் சோபனா.

"அழாதே சோபனா.. நான் கல்யாணம் முடிச்சேன். ஆனா... வாழக் கிடைக்கல்லே. ஏழைப் பெண்கள் கதை இப்படிதான் இரிக்கும். பணக்கார இடத்திலே எல்லாம் இருந்தும் வழிகெட்டு நடப்பாங்க. அதை யாரும் பேசமாட்டாங்க. தங்கைகளின் வாழ்வுக் காக நீ வாழ்வை இழந்தாய். நான் மகளுக்காக வாழ்கிறேன். வாழ்வைத்தான் இழந்தேன். இழக்கமுடியாததை இழக்கவில்லை. சந்தர்ப்பம் சூழ்நிலைதான் அதற்கு காரணம் மட்டுமல்ல சந்திக்கும் மனிதர்களும் காரணம்" என்றேன் நான்

வாழ்வதற்காக பணம்தேடி சவூதி வந்த சோபனாவுக்கு நேர்ந்த துயரம் யாருக்கும் நேரக்கூடாது.

கணவன் பிரிந்ததை சொல்லி ஆறுதல் பெறுவோம் என்று வந்த எனக்கு சோபனாவுக்கு நடந்த துயருக்கு ஆறுதல் சொல்லவேண்டி வந்துவிட்டது. முடியுமான வரை ஆறுதல் சொன்னேன். எப்படி சொன்னாலும் நடந்தது நடந்ததுதானே! அழிக்கமுடியுமா?

சோபனாவின் கண்கள் அழுது வீங்கிப் போயிருந்தன. கன்னங்கள் சிவப்பேறியிடுந்தன. குளிர் பானம் கொண்டுவந்து தந்தாள். சாந்தி உங்கட புருஷனை நல்லவன் என்றுதானே நம்பினேன். இன்னொரு பொம்புளையை மூக்குமுழியுமாக கண்டா அவளோட ஓடிடுவான்" என்றாள் சோபனா

"சோபனா எனக்கு நேரமாகுது நான் வரப்போறன் வாற வெள்ளிக்கிழமை வாறன். மிச்சத்தை பேசுவம்" என்று கூறி புறப்பட்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சவூதியில் சில பெண்கள் கெட்டுப்போகுறார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். காமவெறி பிடித்தவாகள் பொஸ்ஸாக கிடைத்தால் அப்படித்தான் நேரும். நான் வாழ்க்கையைத்தான் இழந்தேன், மானத்தை இழக்கவில்லை.

மானத்தை இழந்தாலோ இழக்காவிட்டாலே தாய் நாட்டுக்குச் செல்லும் போது எங்களை சந்தேகங் கொண்டுதான் பார்ப்பார்கள். அதில் சந்தேகமில்லை என்று நினைத்தவாறு வீட்டை அடைந்தேன்.

REFERENCE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைராக்கியம்

மாலைவேளை வானம் இருட்டி கறுத்திருந்தது. வேகமான காற்று வீசி குளிரை உடம்பில் பாய்ச்சியது. சில நிமிடங்களில் மழைபொழிவதற்கான அறிகுறி தென்பட்டது. வானம் முழங்கத் தொடங்கியதும் சிறுவர்கள் வீடுகளுக்குள் புகுந்து கொண்டார்கள் மின்னல் எச்சரிக்கை காட்டியது.

சரீப் ஹாஜியார் சாய்வு நாற்காலியில் அமர்ந்தவாறு தனது திட்டங்களை வரிசைப்படுத்தி பார்த்தார்.

“இன்றைக்கு வானம் வெளுத்து வாங்கப் போகின்றது. மழை தேவையான அளவு பொழியப் போகின்றது. நாளைக்கு நெல் விதைக்கலாம்” என்று முடிவு கட்டிய சரீப் அதிர்சிக்குள்ளானார். இருட்டிய மழை எங்கு போனதோ? இருள் விலகி வெளிச்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர தொடங்கியது. மழை பேய்வதற்கான அறிகுறியே மாறிப் போனது. சரீப் ஹாஜியாரைப் போல் இன்னும் எத்தனையோ பேர் திட்டம் போட்டிருப்பார்கள்.

"சுபைதா.. மழையை பார்த்து பார்த்து ஏமாந்து போனம். எப்பதான் பேயப்போகுதோ? எப்பதான் வெள்ளாமை செய்யப்போறோமோ?" என்று கூறினார் சரீப் ஹாஜியார்.

"பொறுங்களேன் பேயும். பேயாமலா இருக்கப்போகுது?" என்றாள் மனைவி சுபைதா.

"கடைப்பக்கம் போய் வாரேன்" என்று கூறி புறப்பட்டார் சரீப் ஹாஜியார்.

ஐம்பது வயதை தாண்டி இருந்தாலும் ஹொண்டா ஸிடி 250 மோட்டார் பைக்கிலில்தான் சரீப் ஹாஜியார் பறப்பார். அதில் ஏறி அமர்ந்தாலே அவருக்கு இளமைப்பருவம் வந்துவிடும் வேகமாகத்தான் ஓடுவார். தனது அரிசிக்கடையருகே மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு கடைக்குள்ளே போனார்.

சுதந்திரமாக அமர்ந்து வேலைபார்த்த ஊழியர்கள் முதலாளியைக் கண்டதும் எழுந்து நிற்கத் தொடங்கினார்கள். சுதந்திரத்தை பறிகொடுத்த அடிமைகள் போல நின்றார்கள்.

"இன்றைக்கு அரிசி மூட்டைகள் அதிகமாக விற்கலியே ஏன்?" சரீப் ஹாஜியார் கேட்டார்.

"மற்ற கடைகள் நம்மை விட ஐம்பது ரூபா குறைச்சு விற்கிறாங்க. அதான் நமக்கு விக்கல்லே" கடை விற்பனையாளர்கள் கூறினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இதுக்கு மூளையைப் பாவிக்கத் தெரியாதா? எல்லாம் நான் சொல்லித்தானா தரனும்? ஒவ்வொரு மூடையிலும் இரண்டு கிலோ குறைச்சிப்போட்டு அவர்களை விட இருபது ரூபா குறைச்சி விற்கவேண்டியது தானே" என்றார் சரீப் ஹாஜியார்.

"அளவை நிறுவையிலே குறைக்கிற பாவமான காரியம் முதலாளி" என்றான் விற்பனையாளன் ஒருவன்.

"இங்கே யார்ரா பாவபுண்ணியம் பார்க்காணுகள்? வட்டிக்கு கொடுக்காணுகள். மத்தவன்ட பொண்டாட்டிக்கிட்ட போறாணுகள். நாம யாவாரம்தான் செய்யிறம் உங்களுக்கு நான்தான் சம்பளம்தாரேன். நான் சொல்லுறத கேட்கனும். ரெண்டு கிலோ குறைச்சி கட்டுங்க." என்றார் சரீப் ஹாஜியார்.

அதன்படி ஒவ்வொரு மூட்டையிலும் இரண்டுகிலோ குறைக்கப்பட்டு புதிதாக மூட்டைகளும் உருவாகின.

'இந்தப்பாவம் நமக்கல்ல முதலாளிக்கு. மக்காவுக்குப் போய்வந்தும் பாவம் செய்ய தயங்குகிறார் இல்லையே' என்று தொழிலாளர்கள் பேசிக் கொண்டார்கள்.

மூட்டையில் நிறை குறைந்துள்ளதை அறியாத மக்கள் சரீப் ஹாஜியாரின் கடையில் அரிசி விலை குறைவு என்று விழுந்து விழுந்து வாங்கத் தொடங்கினார்கள்.

சரீப் ஹாஜியார் அரிசிக்கடையில் இருந்து அரிசி மூட்டைகளுக்கு வந்த பணத்தை எண்ணி கட்டுக் கட்டாக அடுக்கிக் கொண்டிருந்தார்.

"முதலாளி... பிச்சை தாங்க" என்று கேட்டவாறு ஐந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



பிச்சைக்காரர்கள் அணிவகுத்து நின்றார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கோலமாக நின்றார்கள்.

"இந்தா.. கண்ணன் அஞ்சு ரூபா இருக்கு, ஆளுக்கு ஐம்பது சதம் கொடுத்திற்று மிச்சத்தை கொண்டா" கடைச்சிப்பந்தியிடம் கொடுத்தார் சரீப் ஹாஜியார்.

'ஐம்பது சதம் அவர்களுக்கு என்ன பிரயோசனத்தை கொடுக்கும்? அவர்கள் தலை எழுத்து அப்படி இன்னும் இருநூறு முன்னூறு இடங்களுக்கு போய் வாங்கினால்தான் ஒருபிடியாவது உண்ணலாம். எனது முதலாளி சரீப் ஹாஜியார் மட்டுமல்ல எல்லாமுதலாளிகளும் அப்படித்தான் இருக்கிறார்கள்' என நினைத்துக் கொண்டான் கண்ணன்.

"என்னடா முணுமுணுக்கிறே. போய் வேலையைக் கவனி. முன்னாலுள்ள மூடைகளை எடுத்து பின்னால அடுக்கு. அப்பதான் வாற அரிசி மூடையை முன்னால அடுக்கலாம் என்றார் சரீப் ஹாஜியார்.

'எனக்கு நல்ல ஒருத்தருக்கிட்டே வேலை கிடைச்சா.. போயிருவன். மனச்சாட்சி இல்லா மனிசன். அளவை நிலுவையிலே குறைக்கிறவன் என்ன மனுசன' என்று நினைத்துக் கொண்டான் கண்ணன்.

முதலாளி பிச்சை தாங்க என்றவாறு ஒரு முதியவர் வந்து நின்றார்.

"கொஞ்சத்துக்கு கொஞ்சம் இவனுகள் படையெடுக்கானுகள். உனக்கு புள்ளைகள் இல்லையா. புள்ளைகள் வீட்ட இருந்து சாப்பிட்டு இருக்கவேண்டியதுதானே. உனக்கெல்லாம் பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறையவேணும் அல்லவா கண்ணா... இதை கிழட்டுப்பயலுக்கிட்டே கொடுத்திற்று வா" என்றார் சரீப் ஹாஜியார்

"ஹாஜியார் பிச்சை இல்லையெண்டு சொல்லுங்க பேசாம போயிருவேன். மரியாதை இல்லாம பேசாதே" என்றான் வயோதிப பிச்சைக்காரன்.

"எடுக்கிற பிச்சை மரியாதை இல்லாம பேச்சு வேற" என்றார் சரீப் ஹாஜியார்.

"எடுக்கிற பிச்சைதான்! ஆனா.. உன்னைப்போல கெட்ட மனமுள்ளவங்கட பிச்சை தேவல்ல" என்று கூறிவிட்டு மின்னல் வேகத்தில் போய்விட்டான் வயோதிப பிச்சைக்காரன்.

சரீப் ஹாஜியாருக்கு அவமானமாகிவிட்டது.

"கண்ணன் இங்கே வா. இனி ஐம்பது ரூபா மட்டும் மாத்திக் கொடுக்கனும். அதுக்குமேல வாறவங்களுக்கு இல்லேன்னு சொல்லு" என்றார் சரீப் ஹாஜியார். தலையாட்டிக் கொண்டான் கண்ணன்.

கண்ணன் சரீப் ஹாஜியாரிடம் வேலைக்கு வந்து ஐந்து வருடங்களுக்கு மேல். ஒழுங்கான முறையில் வேலைக்கேற்ற கூலி கொடுப்பதில்லை. வேறிடத்தில் வேலைக்கு போகவும் விடுவதில்லை. காலை ஏழுமணியிலிருந்து இரவு எட்டுமணி வரையும் இருந்து அரிசிக் கடையில் போராடும் கண்ணனுக்கு மாதம் மூவாயிரம் மட்டும்தான் சம்பளம்.

எப்படியாவது இன்றைக்கு முதலாளியிடம் கதைத்துவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரிவராவிட்டால் வேறு எங்காவது வேலைக்குப் போக வேண்டியது தான். என்று முடிவு எடுத்தான் கண்ணன்.

இரவு எட்டுமணிவரையும் காத்திருந்தான். கடைக்கு வருபவர்கள் குறைந்து வருகையும் நின்றாயிற்று. தெருவிலும் மனிதர்கள் அரிதாக காணப்பட்டார்கள்.

"கண்ணன் என்ன யோசிக்கிறே? வீட்ட போறல்லியா?" சரீப் ஹாஜியார்தான் கேட்டார்.

"முதலாளி உங்ககிட்டே நான் ஐஞ்சு வருஷத்துக்கு மேலே வேலை செஞ்சிருக்கன். காலையிலே ஏழு மணியிருந்து இரவு எட்டுமணிவரையும் வேலை செஞ்சி மூவாயிரம் சம்பளம் பெறுவது நானாகத்தான் இருக்க முடியும்" என்று கூறி நிறுத்தினான் கண்ணன்.

"உனக்கு மட்டும்தான் மூவாயிரம். மத்த இடங்கள்ள வேலை செய்யிறவங்களுக்கு குறையத்தான் இருக்கும்" என்று ஒருபோடு போட்டார் சரீப் ஹாஜியார்.

துணிவுடன் பேசத் தொடங்கினான் கண்ணன் "அப்படில்ல ஹாஜியார் மத்த இடங்கள்ள வேலை செய்யிறவங்க ஐயாயிரம் எடுக்காங்க. அப்பாடி இல்லாட்டிலும் எனக்கு ஆயிரம் ரூபா கூட்டித்தரணும் இல்லாட்டி..." என்று இழுத்தான் கண்ணன்.

"இல்லாட்டி... என்ன?" சரீப் ஹாஜியார் எதிர்வாதம் பேசினார்.

"இல்லாட்டியென்ன இனி வேலைக்கு வரமாட்டேன். முந்தியப்போல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி பயம்காட்டமுடியா'' என்றான் கண்ணன். உடனே வெளி விராந்தைக்கு வந்துவிட்டான்.

"இனி இங்கே இந்த ஊரிலே எந்த கடையிலும் வேலை செய்யவிடமாட்டேன்'' வீராப்பு பேசினார் சரீப் ஹாஜியார்.

"அப்படி பயம்காட்டின அந்தக்காலம். வேற கடையிலே வேலை செய்கிறத தடுத்தா குள்ளத்தனம் அனைத்தையும் எல்லாருக்கும் சொல்வேன். அரிசி மூடையிலே இரண்டுகிலோ குறைச்சி கட்டுறதையும் சொல்வேன்'' என்றான் கண்ணன்.

"ஆ... கண்ணா... ஐனூறு கூட்டித்தாறன். போயிராதே'' என்று கெஞ்சினார் சரீப் ஹாஜியார். கெட்ட தனத்தை மற்றவர்களுக்கு கூறிவிடுவான் என்று கண்ணன் சொன்னவுடன் ஆடிப்போனார். ஆனால் இந்த சில நூறுரூபாவுக்கு கண்ணன் மசியப் போவதில்லை.

"உன் கெட்டதனத்தை யாருக்கும் சொல்லமாட்டேன். என் வழியில் வராதே. இஸ்மாயில் போடிர கடையிலே வேலை செய்யப்போறன். ஐயாயிரம் தருவதா சொன்னார்.'' என்று கூறி புறப்பட்டான் கண்ணன்.

"ஆ... கண்ணன் போயிராதே'' என்று தடுத்துப்பார்த்தார். பயனில்லை. மூவாயிரம் சம்பளத்துக்கு இரவு பகலாக யார்தான் கஷ்டப்படுவார்கள்?

கண்ணன் போனபின் சரீப் ஹாஜியாரின் வலதுகை உடைந்த மாதிரித்தான். வியாபாரமும் மந்த கதியாயிற்று. மூவாயிரம் சம்பளத்துக்கு ஆள் எடுப்பதே முடியாததாகிவிட்டது. வியாபாரமே தெரியாத ஒருவனை நான்காயிரம் சம்பளத்துக்கு அமர்த்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



வியாபாரம் முன்புபோல நடக்கவில்லை. இஸ்மாயில்போடியின் கடையில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தான் கண்ணன்.

அவன் வாடிக்கையாளர்களிடம் சரீப் ஹாஜியாரின் நிறைகுறைந்த அரிசி மூடைபற்றியும் சொல்லி சொல்லி வியாபாரத்தில் ஈடுபட்டான். தொடர்ந்தும் மக்களை ஏமாற்ற நான் விரும்பவில்லை. அதனால் தான் அவரது கடையை விட்டும் விலகினேன் என்று கூறினான்.

சரீப் ஹாஜியாருக்கு அரிசிக் கடை மூலம் கிடைத்த வருமானம் மிக குறுகிவிட்டது. அதை மூடுவோமா? என்ற எண்ணமும் அவருக்கு உருவானது. அளவை நிறுவையில் குறைத்தால் ஆண்டவனும் பார்த்துக் கொண்டிருப்பானா?

மழையின்றி வயலும் காய்ந்து விளைவில் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. குலை குலையாய் தொங்க வேண்டிய நெற்கதிர்கள் அங்கொண்று இங்கொன்றாக நாலைந்து நெல் மணிகளுடன் காட்சி தந்தன.

சரீப் ஹாஜியார் அவரது வாழ்நாளில் இப்படியொரு வீழ்ச்சியை கண்டதே இல்லை.

வேதனை அவரது மூளையை குடைந்தது. சதா சிந்தித்த வண்ணம் இருந்தார். மோட்டார் சைக்கிலில் ஏறிப்பறந்து திரிபவரின் மோட்டார் சைக்கில் இப்போது பறப்பதில்லை; தவழ்கிறது.

"சுபைதா..."

"என்னங்க.." கேட்டுக்கோண்டே அவர் அருகே வந்தாள் அவரின் மனைவி சுபைதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வயலும் விட்டுப்போச்சு, அரிசிக் கடையிலே யாவாரமும் இல்லை. மிச்சம் கஷ்டமா இரிக்கு." என்றார் சரீப் ஹாஜயார்.

"நம்ம கடையிலே நிண்ட கண்ணனை விட்டிருக்கப்போடா. அவன் நல்லவன். நான் சொன்னதானே ஐயாயிரம் சம்பளம் கொடுங்கண்ணு. நீங்க கேட்கலியே" என்றாள் சுபைதா.

"அப்படி கொடுக்கலாமா..." என்றார் சரீப் ஹாஜியார். சந்தைக்கு போய் கறிவாங்கி வருவதாக புறப்பட்டு போனார். வழியில் அரவது மோட்டார் சைக்கிலுடன் லொறி போதியதால் இல்லை. லொறியுடன் மோட்டார் சைக்கில் மோதியதால் சரீப் ஹாஜியாரின் உயிர் அவ்விடத்திலேயே பிரிந்தது. இன்னா லில்லாஹி வஹின்னாலி இராஜுஹுன்.

*குறுகிய கால வாழ்விற்கு முடிவில்லாத ஆசைகள் தேவையா?*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலியும் பொறிகளும்

சுகுமார், அந்த தாபனத்தின் கிழக்குப் பிராந்திய அலுவலகத்தில் உத்தியோகத்தராக ஐந்து வருடங்களுக்கு மேலாக கடமை புரிகின்றான்.

ஒருவர் ஒரு கிளையில் நான்கு வருடங்களுக்கு மேல் கடமைபுரியக்கூடாது. இடமாற்றம் கிடைத்துவிடும். ஆனால் சுகுமார் பிராந்திய அலுவலகத்தில் கடமை புரிவதால் மேலதிகாரியை கைக்குள் போட்டுக் கொண்டான் என்று தான் சொல்ல வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நிறுவனங்களில் மேலதிகாரி வைத்ததுதான் சட்டம் என்று சிவநாதன் நினைத்துக் கொண்டான். அவன் அந்த அலுவலகத்துக்கு வந்து ஒரு வருடம்தான் ஆகிறது. ஊரிலே நான்கு வருடங்கள்தான் கிளை தாபனத்தில் வேலை செய்தான். சட்டதிட்டத்திற்கமைய சிவநாதனுக்கு இடமாற்றம் கிடைத்து விட்டது. ஆனால் சுகுமார் ஐந்து வருடங்களுக்கு மேலாக பிராந்திய அலுவலகத்தில் வேலை புரிகிறான்.

பிடிக்கின்றவர்களை ஒழுங்காக பிடித்தால் பென்ஷன் பெறும் வரையும் ஓரிடத்தில் வேலை செய்யலாம் என்பதை உறுதிப்படுத்துவது போலிருந்தது சுகுமாரின் நடவடிக்கைகள்.

ஐந்து வருட சேவையை முடித்து ஆறாவது வருடத்தை தொடங்கி விட்டான்.

கிளைத் தாபனங்களைப்போல வேலைப்பளுவும் இல்லை. குஷியாக திரிவதும் அங்குள்ளவர்களின் வேலையில் ஒன்று விடுவானா சுகுமார்?

பிராந்திய முகாமையாளரை கைக்குள் போட்டுக் கொண்டான். நினைத்ததை செய்து வந்தான்.

சுகுமாரின் கூற்று சரியாகத்தான் இருக்கும் என்று எல்லா விடயங்களிலும் நம்பி கையெழுத்து இட்டு வந்தார் பிராந்திய முகாமையாளர், ஆனால் உண்மையில் பிராந்திய முகாமையாளராக செயற்பட்டான் சுகுமார். பெயரளவில் மட்டும்தான் பிராந்திய முகாமையாளராக இருந்தார் - பிராந்திய முகாமையாளர் எதனைப் பற்றியும் சிந்திப்பதில்லை. சுகுமார் தான் எதனையும் தீர்மானித்து முடிவெடுப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



''பிராந்திய முகாமையாளர்'' என்று சுகுமாரை எதிரிகள் வசைபாடுவார்கள். உண்மையில் பிராந்திய முகாமையாளர் என்று தன்னை நினைத்துக் கொள்வான் சுகுமார். அவனுக்கு சிந்தனாசக்தி குறைவுதான்.
சிவநாதன் சுகுமாரைப் பற்றி சற்று சிந்தித்து பார்த்தான்.

"சுகுமார் அதிசயமான மனிதன். அவனை நல்லவன் என்றுதான் எண்ணி இருந்தேன். வெட்கக் கேடான பிறவி. மேலதிகாரியின் விடயங்களுக்குகூட பிராந்திய முகாமையாளர் கையெழுத்து போட வேண்டும் என்பதற்காக சுகுமாரே பிராந்திய முகாமையாளர் என்ற நினைவில் பேசுகிறானே!

முதுகெலும்பில்லாத அதிகாரிகள் கேட்டுக் கொண்டிக்கிறார்கள். ஒரு வருடத்திற்குள் சுகுமாரின் எவ்வளவோ திருகுதாளங்களை கண்டு கொண்டேன்.

சொல்லவே வெட்கமாயிருக்கிறது. ஊரில் உள்ள கிளையில் சொந்தக்காரர்களுக்கு கணக்கு திறந்து அவர்களின் பெயரில் கடன். மேலதிகப்பற்று எடுத்து சொந்த தேவைகளை நிறை வேற்றுகிறான். சிலரின் பெயரில் கடன் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. இதையெல்லாம் பார்ப்பதற்கு யார் இருக்கிறார்கள்?

பிரதேச முகாமையாளரே இதையெல்லாம் நம்பாமல் இருக்கிறார். வேலியே பயிரை மேயும் கதைதான்.

சிறந்த வாடிக்கையாளர்களுக்கு கடனுதவிகள் கிடையாமல் போக வேறு நிதி நிறுவனங்களை நாடியுள்ளார்கள். இதனால் நமது தாபனத்துக்கு நட்டமும் வேறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
15651

இப்பிரதேச நிறுவனம் சுகுமாரின் சொந்த நிறுவனம்போல இருக்கின்றது. அப்பா, பாட்டன் சொத்து என்ற நினைப்பு. என்றோ ஒரு நாளைக்கு அவருக்கும் இழப்பு ஏற்படத்தான் போகிறது." என்று சுகுமாரின் அட்டகாசங்களை எண்ணிக் கொண்டிருந்த சிவநாதன் சிற்றூழியர் கோபாலின் "சேர்" என்ற சத்தம் கேட்டு திரும்பினான்.

"சாப்பாடு எடுக்கனுமா?"
"நான் வீட்ல இருந்து கொண்டந்த" என்றான் சிவநாதன்.

சுகுமாரும் சிவநாதனும் ஒரே தரத்தில் உள்ள உத்தியோகத்தர் கள்தான்! இருந்தாலும் தன்னை மேலாகவும் உயர்வாகவும் எண்ணிக் கொள்வான் சுகுமார். பிரதேச முகாமையாளரும் சுகுமாரை உயர்வாகத்தான் எண்ணிக் கொண்டிருக்கிறார்.

பிரதேச முகாமையாளர் சுகுமாரை அழைத்தார். "என்ன சேர்" என்றவாறு தலையை சொறிந்து கொண்டு நின்றான் சுகுமார்.

"அஞ்சு வருஷங்களுக்கு மேல எனக்கிட்டே வேலை செஞ்சிருக்கே. நல்ல அனுபவம் இருக்கு. உன் விருப்பத்துக்கு காரியங்களை முடிக்க நான் அங்கீகாரம் தாறேன்தானே! தயங்காதே நீ விரும்புற மாதிரி செய். கையெழுத்து வைக்கன். என்னை மாட்டிடாதே" என்றார் பிரதேச முகாமையாளர் ராமநாதன்

"அப்படிச் செய்வேனா சேர்? என்னை நம்பி சொல்ற போது உங்களை மாட்டுவேனா?" என்றான் சுகுமார்.

"கல்முனை கிளைக்கு ஒரு ஒபிஸர் தேவையாம். இரண்டு கிழமைக்கு! எங்கே இருந்து அனுப்பலாம் யாரை அனுப்பலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று பார்த்து கடிதம் அடிச்சி கொண்டு வாங்க" என்றார் பிரதேச முகாமையாளர்.

சுகுமாரின் குரோதமனம் எதிரியார்? எங்கிருக்கிறார்? என்பதை ஆராய்ந்து முடிவு எடுத்தது.

பொத்துவிலில் வரதன் என்பவர் இருக்கிறார். அவரது சொந்த ஊரும் பொத்துவில்தான். இரண்டு கிழமை பொத்துவில் இருந்து அலைந்து கல்முனைக்கு போய் வரட்டும் என்று நினைத்து செயற்பட்டான் சுகுமார். அவனின் தோற்றதைப்போல மனமும் குள்ளம்தான் என்று நினைத்துக் கொண்டான் சிவநாதன்.

'இவன் என்ன மனிதன்? அக்கரைப்பற்று கிளையில் எத்தனையோ ஆபிஸர் கும்மாளம் போட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இவர்களில் ஒருவரை கல்முனைக்கு அனுப்பாமல் - பொத்துவிலில் இருக்கும் வரதனை கஷ்டப்பட வைத்திருக்கிறான். பிடிக்காதவர்களை எவ்வளவும் கஷ்டப்படவைப்பான். பிடித்தவர்களின் நலத்தை மேலும் பேணுவான். மூர்க்கத்தன மானவன். இதை பிரதேச முகாமையாளர் சிந்தித்து பார்க்கிறார் இல்லையே. சுகுமாரின் எதிரிகள் எடுத்துச் சொல்லியும் அவருக்கு விளங்குவதில்லை.

கடன்கோட்டு சக ஊழியரான சுகுமாரின் நண்பன் விண்ணப் பித்திருந்தான். அக்கடன் அதியுயர் தகமையுள்ள அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்தவில்லை. அதனால் அக்கடனை அங்கீகரித்து அனுப்ப முடியாது. தனக்கு வேண்டியவன் என்ற சுயநலத்தின் நிமித்தம் 'சேர் உறுதிப்படுத்தி ஒரு கடிதமும் இணைத்திருக்கிறேன். அதிலும் கையெழுத்திடுங்கள் என்றான் சுகுமார்.

இப்படியெல்லாம் செய்திருக்கிறான். ஆனால் உண்மையை துணிந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் ராகவன் அதே கடனுக்கு விண்ணப்பித்திருந்தான். அவன் மிக நல்லவன். தகமையுள்ள அதிகாரி ஒருவர் உறுதிப்படுத்த வில்லை என்று திருப்பி அனுப்பிவிட்டான். அப்படியான குள்ளன் சுகுமார். ஏன்தான் இவனுகளை எல்லாம் உயர் அதிகாரி நம்பி செயற்படுகிறாரோ என்று வியந்தான் சிவநாதன்.

அவன் மனதில் சுகுமார் நடத்துகின்ற ஓரங்க நாடகமே நிழலாடும்.

"கடனுக்கு விண்ணப்பித்த சக ஊழியர் ராகவன் சுகுமாரின் தரத்தையொத்தவன்தான். அவரைவிட நான்கு வருடங்கள் தேர்ச்சி பெற்றவன். அவன் அதியுயர் தரமுள்ள அதிகாரியின் கையெழுத்து வாங்குவதற்கு எங்கு செல்லமுடியும்? பிரதேச முகாமையாளர் தான் அத்தரத்தில் உள்ளவர். தனது நண்பனுக்கு கையெழுத்து வாங்கி கொடுக்க முடியும் என்றால் நண்பனைவிட உயர் தரத்திலுள்ள ராகவனுக்கு கையெழுத்து வாங்கி கொடுக்கமுடியாதா?

பிரதேச முகாமையாளர் இதையெல்லாம் பற்றி சிந்திக்கிறார் இல்லையே! மூளை இருப்பதில் வேலையே இல்லை! அவன் எதைக் கொடுத்தாலும் கையெழுத்துப் போடுவார்.

சுகுமார் எப்படி தன்னை நல்லவன் என்று நம்பிக் கொண்டிருக்கிறான்! குள்ளத்தனத்தின் குண்டு உருவம் கொண்டவன்.

அதியுயர் தரத்திலுள்ள அதிகாரி ஒருவர் கையெழுத்திட வேண்டும் என்றால் உயர்தரத்திலுள்ள அதிகாரியை அக்கிளைத் தாபனத்துக்கு போடாதது யார் பிழை? நிர்வாகத்தினரின் பிழைக்கு ஒரு ஊழியர் கடன் பெறுவதில் பாதிக்கப்பட்டுவது முறையா? உயர் அதிகாரி ஒருவரிடம் கையெழுத்து பெறச் சென்றால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலிடத்து உத்தரவு இல்லாமல் கையெழுத்திட முடியாது என்று அவர் மறுத்தால் ராகவனால் என்ன செய்ய முடியும்? எனப் பலதையும் நினைத்தான் சிவநாதன்.

அவனுக்கு மூச்சு விடமுடியாத அளவு வேலை கொடுத்திருந்தார்கள். சுகுமாருக்கு அளவான இலகுவான வேலை. கதை பாதி, வேலை பாதி என்றுதான் நாள் போகும்.

சில அலுவலகங்களில் இதையெல்லாம் யார் கவனிக்கிறார்கள்?

சனிக்கிழமை விடுமுறைநாள் ஐந்து நாட்களும் வேலைக்கு போய்வரும் பிரயாணக்களைப்பு சிவநாதனை மிக சோர்வாக்கி விட்டது. சனிக்கிழமை என்றபடியால் ஏழு மணிவரை கட்டிலை விட்டு எழவில்லை.

தொலைபேசி அழைப்பு வந்துதான் எழுந்தான்.

கிளை நிறுவனம் ஒன்றில் கடமை புரியும் ராகவன்தான் அழைப்பு கொடுத்திருந்தான்.

"ஹலோ சிவநாதன் சுகமா இரிக்கிறியா?" என்றான் ராகவன்.

"சுகம்தான். என்ன விஷயம் ராகவன்"

"சுகுமார் காட்டுற அடாவடித்தனத்தை பார்த்தியா? அவருக்கு வேண்டியவர் யாராக இருந்தாலும் சட்டத்துக்கு முரணாக இருந்தாலும் உதவுவார். நான் அவருக்கு எதிரணியில் உள்ளதால் சின்னொரு பிழை விட்டாலும் பெரிசுபடுத்தி கடன்பத்திரங்களை ரிஜக்ட் பண்ணி விடுறான்" என்றான் ராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என் கண்முன்னே அவன் காட்டுற அடாவடித்தனத்தை என்னாலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாம இரிக்கு. அஞ்சு வருஷங்களுக்கு மேலே இரிக்கான். அவனை இடமாற்றம் செய்யுறதான் சரியான வழி" என்றான் சிவநாதன்.

"யூ கரெக்ட் தொழிற்சங்கவாதிகளுக்கிட்டே சொல்லி இரிக்கன். நம்ம ஆட்களுக்கு செய்யிற அநியாயத்தையும் சொல்லி இரிக்கன். அதுபோக இவர் மட்டும் அஞ்சு விருஷத்துக்கு மேலே அவடத்தையே கட்டிப்புடிச்சிக் கொண்டிருக்க முடியுமா? தப்பிப்போனா நாலைஞ்சு மாசங்கள் இரிப்பார்.

எனக்கு முன்ன அப்பாறை மாவட்ட தொழிசங்க அமைப்பாளரே சொல்லி இரிக்கார் - சுகுமாரின் திருகுதாளங்களை. இவருக்கு மட்டும்தானா வேலை செய்ய முடியும்? இவருக்கு சேர்குலரை படிச்சி விளக்கம் சொன்னவங்களும் இங்கதான் இரிக்கிறாங்க. அப்படி திறமையுள்ள நேர்மையான ஒருத்தரை போடலாம். கடைசி ஆட்டம். சுகுமார் ஆடிட்டு போகட்டும். அவன் போனபிறகுதான் கடன் எடுக்கிற இப்ப விஷயத்தை கேள்விப்பட்டு ஆந்தை முழிமுழிப்பான். அதுக்கெல்லாம் இனி மசியமாட்டேன். அவனை கிளையொன்றுக்கு போய் வேலை செய்ய விடுவதை தவிர வேறுவழியில்லை" என்றான் ராகவன்.

"அவனுக்கு அப்படி செய்யிரதை பாத்து எங்களுக்கெல்லாம் சரியான சந்தோஷம். எப்ப ரான்ஸர் கிடைக்கும் எண்டு கெட்டவன் குட்டனும் நம்புறான்" என்றான் சிவநாதன்.

"இப்ப பயந்து பயனில்லையே! இப்படி எல்லாம் வருமென்று அவர் முதல் யோசிச்சிருக்கனும். அப்பநான்.. வைக்கட்டுமா சிவநாதன்?" என்றான் ராகவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓகே ராகவன்” என்றான் சிவநாதன்.
‘சுகுமார் எல்லாரையும் வெரட்டி வெரட்டி இருந்தார். இப்பதான் முறையா மாட்டிருக்கார். சில மாசத்திலே அவர் கொட்டம் அடங்கத்தான் போகுது' என்று நினைத்துக் கொண்டான் சிவநாதன்.

ஒரு வாரம் கடந்திருக்கும். தொழிற்சங்கத்திலே இருந்து பிரதேச முகாமையாளருக்கு தொலைபேசி அழைப்பு வந்திருந்தது.

அழைப்பை எடுத்தார். “தொழிற் சங்கத்திலே இருந்து பேசிறோம். ராகவண்ட லோனை ஏன் திருப்பினீங்க. கொடுத்திருக்கலாமே!” தொழிற்சங்க தலைவர்தான் பேசினார்

“அதுக்கு அதியுயர் தர உத்தியோகத்தர்ர றிப்போட் வேணுமே” என்றார் பிரதேச முகாமையாளர்.

“கிளையிலே இருக்கிற அதிகாரிதானே கையொழுத்துப்போடுவார். அதியுயர் தர உத்தியோகத்தரை போடாதது உங்கள் தவறு. ஊழியர்களின் தவறு அல்ல. நீங்க கையெழுத்துப்போட்டு ஓகே பண்ணி இருக்கலாமே” என்றார் மீண்டும் தொழிற்சங்கவாதி.

“நான் போய் பார்க்காம எப்படி கையெழுத்துப்போடுற” மீண்டும் கூறினார் பிரதேச முகாமையாளர்.

“அதே கிளையிலே வேலை செய்யிற மூர்த்திக்கு கையெழுத்துப் போட்டு கடனை பாஸ் பண்ணி இருக்கிறீர்களே..! இது ஓரவஞ்சனை” என்றார் விடாப்பிடியாக தொழிற்சங்கவாதி.

சிறிது நேரம் வாயடைத்துப்போனார் பிரதேச முகமையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை சுகுமார் என்னிடம் சொல்லவில்லையே! என்னை மாட்டிவிட்டானே என்று பதறிப்போனார். சமாளித்துக்கொண்டு "மூர்த்தி... என்னிடம் சொன்னான். நான் போய் பார்த்து கையெழுத்துபோட்டேன்" என்று தப்பிக் கொண்டார்.

"இனி தீரவிசாரித்துகடன் கொடுங்க. இன்னும் சுகுமாரை ஆறு வருஷத்துக்கு மேல வச்சிராதீங்க இல்லே. நாங்க ரான்ஸர் கொடுப்போம்" என்று கூறி தொலைபேசியை வைத்தார் தொழிற் சங்க தலைவர்.

சுகுமாரை பிரதேச முகாமையாளர் அழைத்தார்.

"மூர்த்திக்கு கையெழுத்து போடச் சொல்லிற்று ராகவன்ட லோனை திருப்பின பிழையான வேலை. ஏன் என்னோட சொல்லலே. இப்படியான வேலைகள் இனி செய்யாதீங்க. மேலிடத்தை இருந்து ரான்ஸர் வந்தா என்னாலே தடுக்க ஏலா" என்றார் பிரதேச முகாமையாளர் ராமநாதன்.

வாய்மூடி மௌனியானான் சுகுமார். செய்வதை செய்துவிட்டு மௌனம்தானே நிரந்தர மொழி!

'நல்லவர்கள் நல்லவேலை செய்து நல்ல இடத்தைப்பெறுவார்கள். தீயவர்கள் இப்படித்தான் மேலிருந்து கீழ் நோக்கிப் போவார்கள்' என்று நினைத்துக் கொண்டான் சிவநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் வாழ்கிறார்கள்

சியாமளா ஏற்கனவே இருவருடங்கள் சவூதியில் பணிப்பெண்ணாக கடமையாற்றி விட்டு வந்தவள்தான்!

சவூதிக்கு உழைத்து வர வேண்டும் என்று செல்லவில்லை. அவளின் அன்புக்கணவன் நந்தகுமார் சண்டை ஏதும் இன்றி சவூதி சென்றவன் சென்றவன்தான்! சியாமளாவுக்கு பணமோ கடிதமோ அனுப்பவில்லை.

ஊரிலும் அவள் கணவன் நந்தகுமாரைப் பற்றி இல்லாததும் பொல்லாதமும் கூறத்தொடங்கினார்கள். மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக அன்பின் வடிவமாக இருந்த என் கணவன் இன்னொருத்தியில் மயங்கிவிட்டாரே என்பதை சகித்துக் கொள்ள முடியாமல் இருந்தது சியாமளாவுக்கு. மற்றவர்கள் கதைக்கின்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது அவளுக்கு வெட்கம் வேதனையை ஏற்படுத்தியது. எப்படியாவது சவூதிக்கு சென்று அவர் இருக்கும் இடத்தை கண்டுபிடித்து அவரோடு தாய் நாட்டுக்கு வந்துவிட வேண்டும். என்பதே அவளின் குறிக்கோள் ஆகியது.

இந்த நல்லெண்ணத்தோடு சவூதி சென்றவளுக்கு பெருத்த ஏமாற்றமே காத்திருந்தது.

அவர் தொழில் புரிந்த இடத்தில் பணிப்பெண்ணாக ஒரு இந்தியப் பெண்மணி இருந்திருக்கிறாள். அவள் திருமணம் செய்யாதவள். அவள்மீது காதல் கொண்டு திருமணம் செய்து இந்தியாவுக்கே போய்விட்டான் நந்தகுமார். அவனைப் பற்றி எவ்வளவோ உயர்வாக எண்ணியிருந்த சியாமளாவுக்கு நெஞ்சு புண்ணாக வலித்தது.

'என் கணவன் எந்த பெண்ணையும் ஏறெடுத்தும் பார்க்கமாட்டான்' என்று மார்பு தட்டியவளுக்கு வேதனையும் வெட்கமும் நிரந்தரமாகின.

கணவனை அழைத்துச் செல்ல வந்தவளுக்கு இரண்டு வருடங்கள் பணியாற்றிவிட்டு செல்வதே உயர்வாகப்பட்டது. இல்லாவிட்டால் ஊரில் பச்சை பச்சையாக பேசுவார்களே! நஞ்சுகுடித்து சாகவரும்.

மற்றவர்கள் தங்கள் கணவன்மாரை இழிவாகப் பேசுகின்றபோது 'அப்படியல்ல என் கணவர் உத்தமர். என் மீது அதிக அன்பு கொண்டவர்' என்றெல்லாம் சொல்வாள் சியாமளா! இன்று..!

சியாமளா சவூதி எஜமானின் வீட்டு வேலைகளை முடித்துவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். இரண்டு கிழமைகளுக்கு முன்னர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுத்துவந்த தமிழ் சஞ்சிகைதான் சிறகு விரித்தது.

'ஒரு வருடம் என்னருகே இருந்து அன்பாக வாழ்ந்தாரே! எனக்கு சிறு மனவருத்தமும் வராமல் நடந்தாரே! என் தேவை அறிந்து தீர்த்து வைத்தாரே! இப்படிப்பட்டவர் இன்னொருத்தியைக் கண்டு மயங்கிவிட்டாரே! எப்படி அவருக்கு மனம் வந்தது? என்பதை நினைக்க சியாமளாவுக்கு அழுகைதான் வந்தது.

அவள் தனது அறைக்கதவை பூட்டாமல் சாத்தி இருந்தாள். மெதுவாக திறக்கப்படும் ஓசை கேட்டது. நிமிர்ந்து பார்த்தாள்.

பொஸ்ஸின் மகன் வந்து நின்றான். 'யாரும் இல்லை' என்பதை சைகை மூலம் காட்டிவிட்டு சியாமளாவுக்கு அருகே வந்து நின்றான்.

உன் விருப்பமின்றி எதுவும் செய்யமாட்டேன். பயப்பட வேண்டாம் என்று கூறினான். பொஸ்ஸின் மகனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். ஆனாலும் முப்பத்தைந்து வயதுக்குரிய பருமனான உடம்பு.

முன்பொருமுறை நல்லவன் போன்று வாழ்க்கை வரலாறை சியாமளாவிடம் கேட்டான். அவளும் நல்லவன் என்று நம்பி கணவன் ஏமாற்றிவிட்டு போனதை அவனிடம் சொல்லி இருந்தாள். அன்றிலிருந்து பொஸ்ஸின் மகனுக்கு சியாமளாவை அனுபவிக்கலாம என்ற எண்ணம் எழுந்தது.

சியாமளா உட்காந்திருந்த நாற்காலிக்கு அருகே இருந்த நாற்காலியில் பொஸ்ஸின் மகன் அமர்ந்தான். சியாமளாவுக்கு சற்று கூச்சமாக இருந்தது. கணவரைத் தவிர வேறு யாருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகே அவள் அமர்ந்ததில்லை...! எழுந்தாலும் ஏதும் நினைப்பானோ என்று பயந்து இருந்தாள்.

சியாமளா படிக்கின்ற காலத்திலே திறமைசாலி ஆசிரியர்கள் ஒரு முறை சொல்லிக் கொடுத்தாலே விளங்கிக் கொள்வாள். மற்றவர்களைப்போல திரும்ப திரும்ப விளக்கம் கேட்கமாட்டாள்.

குறுகிய காலத்தில் அரபு மொழியை பேச, பேசுவதை விளங்கிக் கொள்ள அவளால் முடிந்தது.

"பக்கத்திலே இருக்கவும் கூச்சப்படுறீங்களே... நானென்ன விழுங்கியா போயிருவன்" என்றான் பொஸ்ஸின் மகன் முக்தார்.

"அப்படி ஒன்டுமில்லை" என்று மழுப்பினாள் சியாமளா. நிம்மதியாக மூச்சு விட்டுக் கொண்டான் முக்தார்.

"உங்க கணவன் உங்களோடு உயிர் என்றீங்க. அப்படி உயிரா இருந்தவர் எப்படி இன்னொருத்தியை முடிச்சிட்டு வாழ்க்கை நடத்த போனார்? உயிராக நடிச்சிருக்கார். நடிப்பவங்கதான் நல்லவங்களா எடுபடுறாங்க ஆனா... கடைசியில்தான் குட்டு வெளிவரும். மானம் காத்துல போகும்" என்றான் முக்தார்.

முக்தார் கூறுவதில் உண்மை இருப்பதாகப்பட்டது சியாமளாவுக்கு!

"அழாதீங்க சியாமளா" என்று சொல்லி வழிந்த கண்ணீரை துடைத்துவிட்டான் முக்தார். ஒருதரம் அவளது கன்னத்தில் சிறிது தாமதித்து தோளிலும் தடவிக் கொண்டு விலகியது. அன்றுதான் அவள் வேறொரு ஆணின் ஸ்பரிசத்தை உணர்ந்தாள். கணவனின் பிரிவில் தனித்திருந்தவளுக்கு உணர்வுகள் பொங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



புரிததன. சிறிது நேரத்தில் நிதானத்துக்கு வந்தாள். பெண்ணல்லவா?

"ஏன் என் கைபட்டதும் கூச்சப்படுறீங்க. இன்னும் அஞ்சு வருஷத்துக்கு இங்கு நிண்டு போகலாம். நாம தனிய இருக்கிறவங்கதானே! மதர் ஈவினிங் வருவார். பாதர் நைட்டுக்கு வருவார். காலை இருந்து ஈவினிங் வரை குஷியாக கதைச்சிருக்கலாம்தானே. உங்க அனுமதியில்லாமல் அணைக்ககூடமாட்டேன்'' என்றான் முக்தார்.

முக்தார் ஏதாவது பேசிப்பேசித்தானே பொழுது போக்கிறான். இதனால் தடையில்லாமல் பழகலாம். தனிமையில் இருந்து கவலையில் விழுவதை விட பேசியாவது பொழுது போக்கலாம்! என்று நினைத்துக் கொண்டாள் சியாமளா.

"என்ன யோசிக்கிறே? நான் வந்து கதைக்கிற பிடிக்கவில்லையா? நான் கதைக்கிற மட்டும்தானே! சிலவேளை அறியாம உங்க உடம்புல கைபடுது. உங்க கணவன் இன்னொருத்தியோட வாழ்றான். நீங்க அப்படியில்லே சும்மா பழகுறீங்க'' என்றான் முக்தார்.

'ஆமா.. என் கணவன் எனக்கு துரோகம் செஞ்சி போயிட்டார். இளம் வயசிலே தனியா இருக்கிற நான் தவறி குற்றம் செய்தா குற்றமில்லை. அப்படி நடக்காம என்னை காப்பற்றி வாறன். முக்தாரைப்போல் எத்தனைபேர் சுத்திவந்தாலும் மசியமாட்டேன்' என மீண்டும் நினைத்தாள் சியாமளா.

"திரும்ப சிந்தனையா? எதுக்கும் யோசிக்காதீங்க சியாமளா'' என்றான் முக்தார்.

பொது நூலகம்
நகர சபை
கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'என்னோடு பேசுவதற்கே வெட்கப்பட்ட சியாமளா பேச விரும்புகிறாள். அருகே போய் அமர்ந்தால் தள்ளிப்போகின்றவள் அருகருகே அமர்கிறாள். சிலவேளை தெரியாமல் கை படுவது போல செய்வேன். ஆட்சேபனையின்றி இருக்கின்றாள். அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்பார்கள். அது சரிதான். இனி சியாமளாவுக்கு பரிசுப் பொருட்கள் வாங்கி கொடுக்க வேண்டும். என்னோடு பற்று பாசம் வர நடக்க வேண்டும். நாள் செல்ல செல்ல சகல ஆசைகளையும் அவள் மூலம் தீர்க்கலாம்' என்று நினைத்து மகிழ்ந்தான் முக்தார்.

"எனக்கு சொல்லிற்று - நீங்க யோசிக்கிறீங்களே..?" என்று கேட்டாள் சியாமாளா.

"மனிசன் யோசிக்கத்தான் வேணும் கவலைபடக்கூடா" என்றான் முக்தார்.

"இது நமது நட்பின் பரிசு" என்று கூறி அழகிய மோதிரம் ஒன்றை சியாமளாவின் கையிலே அணிவித்தான் முக்தார். அப்போது அவனின் கரம் சியாமளாவின் கையில் ஆறுதலாக விளையாடியது. சியாமளா தடுக்கவில்லை.

"ஒரு பவுணாவது இருக்கும். அழகான மோதிரம். இப்படி ஒரு மோதிரமாவது என் கணவன் வாங்கித்தரவில்லையே. அன்பென்று நடித்தது தான் மிச்சம்" என்று நினைத்த சியாமளா முக்தாருடன் மிக நெருக்கமாக பழகத் தொடங்கினாள். இப்படி நெருக்கமாக பழகுவதால் பணம், பொருள், நகை என்பவற்றை சேர்க்கலாம் என்று தான் நினைத்தாள்!

"எப்போ.. உங்கள் பேர்த்டே" முக்தாரின் கேள்வி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆ.. அது வா..! பொருத்தமான நேரத்திலே கேட்கிறீங்களே! அடுத்தமாசம் பத்தாம் திகதி பேர்த்டே" என்று பொய் சொன்னாள் சியாமளா.

"ஐசே... என்ன பிரசன்ட் எதிர்பார்க்கிறீங்க." முக்தார் கேட்டான்.

"நீங்க என்னதர தீர்மானிக்கிறீங்க. என்ன தருகிறீங்க அதை ஏற்றுக் கொள்வேன்" என்றாள் சியாமளா. என் வழிக்கு மெல்ல மெல்ல வந்து கொண்டிருக்கிறாள் சியாமளா என்பதை நினைக்க முக்தாருக்கு மட்டில்லா மகிழ்ச்சி.

"பத்தாம் திகதி நம்பர் வன். நான் நான்கு இருவருக்கும் பொருத்தம். நம் நட்பு மேலும் இறுக்கமடையும்" என்றான் முக்தார்.

நட்புத்தான் இறுக்கமடையும் கற்பை இழக்கமாட்டேன் என்று நினைத்தாள் சியாமளா. ஆனால் முக்தார் மிக மிக நெருக்கமாக பழகத்தொடங்கினான். சில வேளைகளில் கன்னத்தை கிள்ளுவான். தோளில் தட்டுவான். தொடையில் கைவைப்பான்.

எவற்றையும் தடுக்காமல் இருப்பாள் அவளின் மனதில் ஏக்கம் ஒன்று இருப்பதை எடுத்துக் காட்டுவதாக இருந்தது - அவளது செயல்! இதை உணர்ந்து கொண்டான் முக்தார்.

"சியாமளா மதர் வார நேரமாகுது எனது ரூம் பக்கம் போறன். நாளைக்கு வாறன்" என்று கூறிபோனான் முக்தார்.

ஏனோ தெரியாது இப்போதெல்லாம் முக்தாரைப்பற்றி சிந்திக்க தொடங்கினாள். அவன் மீது ஒரு வித பற்று ஏற்பட்டது. அவன் அணிவித்த மோதிரம் அவனை உயர்த்திக் காட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“கணவனாம் கணவன்! என்னை நடுத்தெருவில் விட்டு விட்டு இன்னொருத்தியோடு சுகம் அனுபவிப்பவன் என்ன மனிதன்? என்ன கணவன்?” என்று கணவனை இழிவாக எண்ணத் தொடங்கினாள்

இரவுச்சாப்பாட்டை முடித்துக் கொண்டு தனது அறைக்குள் வந்து கதவை தாழிட்டுக் கொண்டாள்.

முக்தார் மனத்திரையில் கண்சிமிட்டிக் கொண்டிருந்தான். அவனை நினைக்க நினைக்க நெஞ்சத்தில் இன்ப உணர்வுகள் பொங்கின. மின்சார பல்புகளை அணைத்து விட்டு உறங்கத் தொடங்கினாள். அப்போது அவளது மனதில் முக்தாரே சிரித்துக் கொண்டு நின்றான் சிந்திக்க தொடங்கினாள்.

‘இன்னும் ஒரு வருடத்துக்கு மேல் இங்கு இருக்கப்போகின்றேன். முக்தாரின் மனம் மகிழும்படியாக இருந்தால்தானே நிறைய பணம், நகைகளுடன் தாய்நாடு செல்லமுடியும். அவர் நெருங்கிப் பழகுவதாலோ தொடுவதாலோ மானத்தை இழக்கப்போவதில்லை. வெளிநாட்டுக்கு சென்றுவந்த கன்னிப் பெண்களை மணம்முடிக்க விரும்புறார்களில்லை. திருமணம் முடித்த மாப்பிள்ளையால் கைவிடப்பட்ட என்னை இனியார்தான் முடிக்கப்போகிறார்கள்? இருக்கும் வரையும் சந்தோஷமாக இருந்து போவதுதான் சரி. தாய் நாட்டுக்குப் போய் கண்ணீருடன் காலம்தள்ள வேண்டி வரும்.” என்று முடிவெடுத்தாள் சியாமளா.

நீண்ட நேரத்துக்குப் பின்னர் அவளுக்கு உறக்கம் வந்தது. வழமையாக அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் எழுகின்றவள் ஆறு மணிக்குப் பின்தான் எழுந்தாள்.

சுய நினைவுக்கு வர சில நிமிடங்கள் சென்றன. கண்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனவு என்பதை நினைக்க சற்று ஆறுதல் வந்தது.

"ஐயோ.. முக்தார் என்னோடு... நினைக்கவே கூச்சமாக இருக்கிறது. கனவில் நிஜமான இன்பத்தை அல்லவா அனுபவித்தேன். நாலும் அவனும்.. சீச்சீ.. அந்த எண்ணமே வேண்டாம்" என்றெண்ணியவள் விரைவாக குசினிக்குள் போய் பணிகளில் ஈடுபட்டாள்.

வேலைக்குப் போகும் எஜமான், எஜமானி இருவருக்கும் சமைத்து கொடுக்க வேண்டுமே! அவர்கள் போனபின் பக்கத்தில் வந்து நவரசம் கொட்ட பேசுவான். முக்தார் என்பதை நினைத்து ஆனந்தப்பட்டாள்.

நேரம் மின்னல் வேகத்தில் நகர்ந்தது. எஜமானும் எஜமானியும் புறப்பட்டு போய்விட்டார்கள். வீட்டை துப்பரவு செய்து விட்டு முக்தாருக்குரிய உணவை மேசையில் வைத்துவிட்டு குசினியை மூடிவிட்டு தனது அறைக்குள் வந்தாள் சியாமளா.

காலை உணவை சற்று தாமதித்து எடுப்போம் என்ற முடிவோடு இருந்தாள்.

முத்தாரின் அறை மூடப்பட்டிருந்தது. முன்புறம் அவனது சைக்கிள் காணப்படவில்லை. எங்கோ போய் விட்டான் என்பது உறுதியாயிற்று.

இப்போது சியாமளாவுக்கு வேதனையின் ரேகைகள் விரிந்தன.

'இங்கே.. முக்தாருடன் இன்பமாக பேசி பொழுது போக்குகிறேன். கற்பை இழக்காமல் களிப்புடன் இருக்கிறேன். ஊரில் இப்படி யாருடனாவது கதைத்தால் இருவருக்கும் தொடர்பு என்று கதை கடைத் தெருவுக்கும் போய்விடும். நஞ்சு குடித்து உயிரை விட வேண்டிவரும். இங்கு எப்படி கட்டியணைத்து கட்டிப்புரண்டாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதை வெளிவராது. காண்பதற்கு எவருமே இல்லையே! என்று நினைக்கும்போது முக்தார் காரிலிருந்து இறங்கி வந்தான்.

கையில் ஒரு பார்சல் இருந்தது. மறைந்து பார்த்து நின்றாள். சியாமளா. அவளது அறையை நோக்கித்தான் வந்தான் முக்தார். சியாமளா தெரியாததுபோல மறுபறும் திரும்பி இருந்து கொண்டாள்.

அவளது அறைக்கு அருகில் வந்து "சியாமளா உள்ள வரலாமா?" என்று கேட்டான் முக்தார்.

"தாராளமாக வரலாம். நீங்க மட்டும்! ஆனால் வேறு யாரோடும் பேசுவது கூட இல்லை. தெரியும்தானே?" என்றாள்சியாமளா.

"அது தெரிஞ்சு தானே உங்களோட பழகுறன். ஆனா.. ஒன்டுக்கு மட்டும் விரும்புறீங்க இல்லியே!" என்றான் முக்தார். சியாமளா எதுவும் பேசவில்லை. சிறிது நேரம் மௌனமாக இருந்தாள்.

"காலையிலே எங்கு போயிட்டு வாறீங்க"

"நீங்க கேட்டா நான் சொல்லத்தானே வேனும். உங்களுக்கு பிரசன்ட் வாங்க போனன். பேர்த்டேக்கு அட்வான்ஸ் பிரசன்ட்" என்றான் முக்தார்.

பின்பு அதனை சியாமளாவின் கையில் கொடுத்தான். சியாமளா ஆவலுடன் பிரித்தாள். விலையுயர்ந்த சாரிகள் மூன்று இருந்தன.

"இது உங்க தந்தைக்கு தெரிஞ்சா பிரச்சினை வருமே. மோதிரம் சின்ன பொருள். பொட்டியிலே வைச்சிருக்கன். யாருக்கும் தெரியா! இதை எப்படி வைக்கிற? எப்படி உடுக்கிற?" என்றாள் சியாமளா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



"இதுக்கு ஏன் பயப்படுறீங்க? நேத்துதானே தகப்பனுக்கிட்டே சம்பளம் வாங்கினீங்க. இப்ப போய் கடையிலே வாங்கினன் என்று சொல்லுங்க. பக்கத்து வீட்டுகள்ள வேலை செய்யிறவள்கள் எவனோட எல்லாம் பேசுறாளுகள். எவனோடல்லாம் திரிகிறாளுகள். நீங்க எவரோடும் எதுவுமில்லையே! என்னோடு மட்டும் பேசுறீங்க உடம்புல அங்க இங்க தொடுறன். அவ்வளவுதானே..! நாளைக்கு நான் வரக்குள்ள இதை உடுத்து நிக்கனும்" என்றான் முக்தார்.

எதுவும் பேசவில்லை சியாமளா மௌனம் சம்மதத்தின் அறிகுறி முக்தார் சியாமளாவின் கன்னத்தை சீண்டினான் பொய்க்கு சிணுங்கினாள். காதலர்கள் போல உறவுகள் தொடர்ந்தன.

"எப்படி சாறி?"
"இப்படி சாரி எவரும் எனக்கு வாய்கித்தரல்ல!"

"உண்மையாவா?"
"ஆமா" என்றாள் சியாமளா.

"இன்னும் என்னவெல்லாம் வாங்கித்தருவேன் இருந்து பாருங்க. இருவரும் ஒண்ணா இருந்து சாப்பிடுவோம். காலையிலும் பகலிலும் ஒன்டா இருந்து சாப்பிடலாம். இரவில் மட்டும்தான் தனிய சாப்பாடு" என்றான் முக்தார்.

"உங்கட பக்கத்து வீட்டுகாரங்க யாராவது வந்திட்டா ஆபத்து. என்னோட சாப்பிட்டதை உங்க பெற்றோரிட்ட சொன்னா எனக்கு தொழிலும் இல்லாம போயிரும்" என்றாள் சியாமளா

"பயப்படாதீங்க வெளிக்கதவை பூட்டி விட்டுத்தான் வந்தேன்" என்றான் முக்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரும் போய் அருகருகே அமர்ந்து சாப்பிட்டார்கள். ஒரு கணவன் மனைவி எப்படி இருந்து சாப்பிடுவார்களோ அப்படி இருந்து சாப்பிட்டார்கள். முக்தாருடன் நெருக்கமாக பழகக் கூடாது என்று நினைத்தாலும் அவன் சொல்வது எதற்தும் தடைசெய்ய மனமில்லாது இருந்தாள் சியாமளா.

சாப்பிட்டுவிட்டு தனது அறைக்குள் வந்தான் முக்தார். குசினியை துப்பரவாக்கினாள் சியாமளா. குசினியை விட்டு வெளிவரும் வரை பார்த்து நின்றான் முக்தார்.

பதினைந்து நிமிடங்களின் பின்னர் வெளியே வந்தாள்.

"நான் வாங்கிவந்த சாரியொன்றை உடுத்துக் கொள்ளுங்க. ஐஞ்சி நிமிஷத்தாலே உங்கட ரூமுக்கு வாறன்" என்றான் முக்தார். அவனது மூளை திட்டம் ஒன்றை போட்டு தீர்மானம் எடுத்தது.

சில நிமிடங்களில் பின்னர் பூனைமாதிரி பதுங்கி பதுங்கி சியாமளாவின் அறைக்கு அருகே சென்றான். கதவு ஓரத்தால் உள்ளே பார்த்தான். உள்ளாடையில் மாத்திரம் நின்றாள் சியாமளா. எவ்வளவோ அழகாக தெரிபட்டாள் அவள். ஓசைப்படாமல் மெதுவாக நின்று ரசித்தான் முக்தார். அவளது ஒவ்வொரு அங்கமும் தங்கமாக ஜொலித்தது. முக்தார் கொடுத்த சாரியை இப்போதுதான் கையில் எடுத்தாள்.

முன்புறம் திரும்பினாள் அப்போதுதான் முக்தார் பார்த்து ரசிப்பதை கண்டாள். மார்பு நெஞ்சில் நிமிர்ந்து நின்றது.

"வெட்கப்படாதீங்க, எல்லாம் பார்த்திட்டேன் நமக்குள்ளதானே! இனி என்னவெல்லாம் பார்க்கப்போகிறோம்" என்றான் முக்தார் சியாமளா அவசரமாக சாரியை உடுத்திக் கொண்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்தாருக்கு அருகே வந்து உட்கார முனைந்தாள் சியாமளா. கையை பிடித்து இழுத்து கட்டியணைத்தான். விடுபட நினைத்தாலும் முக்தாருக்கு தடை விதிக்காது நின்றாள். மேலும் இறுக அணைத்தான். இரு கன்னங்களிலும் மாறி மாறி முத்தமிட்டான்.

"விடுங்க விடுங்க" என்று கூறினாலும் விடுபட சியாமளா நினைக்க வில்லை. ஒரு வருடத்துக்கு மேலாக ஆண் துணையின்றி இருந்தவளுக்கு அணைப்பு மிக சுகமாக இருந்தது. முக்தாரின் செயல் இன்பத்தை அவளது உச்சிவரை கொண்டுவந்து விட்டது. அவளது அங்கங்களில் எல்லாம் கைகள் தடவிச் சென்றது. சியாமளாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை.

மேலும் மேலும் கழுத்து, மார்பு என்று தடவித்தடவி முத்தமிட்டான் முக்தார். இன்ப உணர்வு பொங்கியது இருவருக்கும்!

கட்டிலருகே நகர்ந்து வந்தான் "யாரும் வந்திடுவாங்க விடுங்க" என்று மாத்திரம்தான் சியாமளா சொன்னாள். கதவை இழுத்து மூடினான் முக்தார்.

முக்தார் அனுபவிக்க முடியாத சுகத்தை அனுபவித்தான் சியாமளாவும் இரு வருடங்களுக்கு பின்னர் ஆண் தரும் சுகத்தை ஆமாம் அவளது கணவன் கொடுக்கும் சுகத்தை முதன் முதலாக வேறு ஆணின் உதவியோடு அனுபவித்தாள்.

எல்லாம் முடிந்தபின்னர் "இழக்கக் கூடாத கற்பையே இழந்து விட்டேன் மானமே போய் விட்டது" என்று அழத் தொடங்கினாள்.

தேற்றினான் முக்தார். வெளிநாட்டுக்கு வரும் அனேகருக்கு இதுதான் நிலை என்ற பொருள் பட கூறினான் முக்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதன்பிறகு ஒருவாரத்துக்கு நான்கு ஐந்து நாட்கள் சுகம் அனுபவிக்க தொடங்கினார்கள். முக்தாரின் மனைவி போன்றே நடக்கத் தொடங்கினாள் சியாமளா.

நாட்களும் வாரங்களும் வருடங்களாயின கனிசமான நகை, பணம் என்பன கொடுத்திருந்தான் முக்தார்.

தந்தையும் தாயும் கடமைக்கு புறப்பட்டு போனபின் சியாமளாவின் அறைக்குள் வருவான் முக்தார். அவனின் வருகையை ஆவலுடன் எதிர்பார்திருப்பாள் சியாமளா. பின்னர் நேரம் விரைவாக செல்லும்.

இரண்டுவருடங்கள் தனியாக கணவனை பிரிந்து இருந்தாலும் இன்பங்களை தடையின்றி முக்தார் மூலம் பெற்றாள் சியாமளா. ஊரில் இருந்தாலும் தனிமையில் வாடி இருக்கவேண்டும். கணவன் தானே வேறு ஒருத்தியோடு ஓடிவிட்டான். இழக்கக்கூடாதென்று நினைத்த கற்பையே சியாமளா இழந்துவிட்டாள். இழக்கக் கூடாதென நினைத்த கணவனையே இழந்து விட்டாள் இனி எதைத்தான் யாரைத்தான் இழந்தால் அவளுக்கு என்ன?

சவூதிக்கு வந்து மூன்று வருடங்களாகிவிட்டன. தாய்நாட்டுக்கு போவதற்கு தயாரானாள். இன்னும் ஒருவருடம் நின்று போகுமாறு வற்புறுத்தினான் முக்தார். சியாமளா கேட்கவில்லை. பயணத்துக்கு ஏற்படுகளை செய்தாள்.

இன்னும் இரண்டு நாட்களில் விமானத்தில் ஏறி தாய் நாடு வந்துவிடுவாள். முக்தார்தான் நெருப்பை மிதித்தவன்போல பதறிப் போனான். எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் சியாமளா கேட்கவில்லை. சியாமளாவும் பிரிய மனமின்றித்தான் பிரியப் போகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுதியாக உள்ள இருநாட்களும் மிக நெருக்கமாகவே பழகினார்கள். இரவில் பழகுவதைக்கூட முக்தாரின் பெற்றோர்கள் தடுக்கவில்லை. காரணம் இரண்டு நாட்களில் சொந்த நாட்டுக்குச் போய் விடுவாளே!

விமான நிலையம் சென்றான் முக்தார். அவன் வாங்கிக் கொடுத்த பரிசுப் பொருட்கள், உடைகள், நகைகள் பெட்டி நிறைய இருந்தன. இரண்டு லட்சத்துக்குமேல் பணமும் இருந்தது. உள்ளே நுழையும் போது முக்தாருக்கு கையை அசைத்துவிட்டு போனாள். ஆறுமாதங்களுக்கு பின் மீண்டும் வருமாறு சொல்லி இருந்தான் முக்தார்.

மீண்டும் வெளிநாடு செல்லும் நிலை வந்தால் கண்டிப்பாக வருவேன் என்று சொல்லி இருந்தாள் சியாமளா.

முக்தாரின் பார்வையில் இருந்து மறைந்து விட்டாள் சியாமளா. ஏக்கப் பெரு மூச்சுடன் திரும்பி வந்து காரில் ஏறி வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

சியாமளாவுக்கு இப்போதுதான் வீட்டுநிலை, வாழ்க்கை, கணவன் எல்லாம் நினைவிற்கு வந்தன. அவர் எங்குபோய் எவளோடு வாழ்கிறாரோ என நினைத்து வருந்தினாள்.

வீட்டை அடைந்ததும் அம்மா தொடக்கம் அனைவரும் மலர்ந்த முகத்துடன் வரவேற்றார்கள். அவளது மனதில் 'தனிமையாய் இருக்கிறேன்' என்ற எண்ணம் மேலோங்கி துயரை ஏற்படுத்தியது. "மகள்.. அவனை மறந்திட்டு ஏழை ஒருத்தனை மணம்முடிச்சி சந்தோஷமாக இருக்கப்பார்" என்றாள் சியாமளாவின் அம்மா கோகிலாம்பாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சவூதிக்கு போனதாலே செய்ய முடியாத தவறெல்லாம் செய்து வந்திருக்கன். என்னத்தத்தான் ஒருத்தர் ஏமாத்திட்டார். நான் ஒருத்தனை ஏமாத்த விரும்பல்லே" என்றாள் சியாமளா.

சியாமளாவின் கணவன் நந்தகுமார் அவளை விட்டுப்பிரிந்த கதை இப்போதுதான் ஊரெல்லாம் பரவியது. சிலருக்கு வாய்க்கு அவலாகியது.

சியாமளா சவூதியில் இருந்து வந்து வருடம் ஒன்று நிறைவானது. கணவன் விட்டுப் பிரிந்து மூன்று வருடங்கள் ஆகியது. அன்றொரு நாள் மாலைவேளை சியாமளாவின் வீட்டருகே வான் ஒன்று வந்து நின்றது.

நந்தகுமார் ஆம் அவளது கணவன் நந்தகுமார்தான் அதிலிருந்து இறங்கினான். ஒரேயொரு பெட்டியுடன் இறங்கினான். வான் புறப்பட்டு போனது. கதவைத்திறந்து வீட்டிற்குள்ளே போனான். சியாமளா சிவந்த கண்களுடன் நின்றாள்.

"என்னை மன்னிச்சிடு சியாமளா. ஒருத்தி விரிச்ச வலையிலே விழுந்துவிட்டன். இப்ப அவள் வேறு ஒருத்தனோட ஓடிட்டாள். என்னை மன்னிச்சிடு. இனி உன்னை கடைசிவரையும் பிரியமாட்டேன்" என்றான்

கணவன் நந்தகுமாரை அணைத்து அழுதாள் சியாமளா. அவளும் கணவனுக்கு துரோகம் செய்தவள்தானே! அழுகைதான் தவறு களுக்கு பரிகாரமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றாக பிறந்த பொறாமை

"நதீரா...நீ எவ்வளவு கட்டுப்பாடு கீழ்ப்பணிவுடன் வாழவேண்டி இருக்கு! நான் எவ்வளவு சுதந்திரமாக வாழ்றன் பாத்தாயா? இந்த வாழ்க்கை உனக்கு தேவைதானா? தங்கச்சி யோசித்து பார்த்து முடிவெடு. உன் கணவரோட வாழ்ரதைவிட தனியா வாழலாம்" என்றாள் நதீராவின் ராத்தா மிஸ்ரியா.

"ஒரு பெண் கணவனுக்கு அடங்கி நடக்கிறதுலதான் வாழ்க்கையின் அர்த்தம் இருக்கு கணவனுக்கு கீழ்ப்பணிந்து நடக்கிறதுதான் பெண்ணின் பண்பு" என்றாள் நதீரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பணிவும் பண்பும் பார்த்து பார்த்து கஷ்டத்தை அனுபவி. உன் விருப்பம்'' என்றாள் மிஸ்ரியா.

''நான் எந்த கஷ்டமும் அனுபவிக்கல்லே நிம்மதியாக இருக்கிறேன். கேட்கிறதை வாங்கித்தாறார். எனக்கு எந்த குறையும் இல்லே'' என்றாள் நதீரா.

இன்னும் ராத்தாவோடு பேசிக்கொண்டிருந்தால் கதை முற்றுப்பெற போவதில்லை அறிந்த நதீரா தனது வீட்டுக்கு வந்து சமையல் வேலையில் ஈடுபட்டாள்.

மிஸ்ரியா சாய்வு நாற்காலியில் அமர்ந்து சிந்தித்தாள்.

''நான் காதலித்து திருமணம் செய்தவள்தான். எனது கணவன் சாரதியாக வேலை செய்தவர். அப்படிப்பட்ட ஒருவரை திருமணம் செய்வதே எங்கள் குடும்பத்துக்கு உயர்வாக இருந்தது. என் கணவரைவிட கீழாக இருப்பவர்கள்தான் மற்றவர்கள். ஆனால் என் தங்கை நதீராவை உயர் ஸ்தானத்தில் உள்ள உத்தியோகத்தன் அல்லவா திருமணம் செய்திருக்கிறான். எதிர்காலத்தில் அவர்கள் என்னைவிட சிறப்பாக அல்லவா இருப்பார்கள். அதனால்தான் இந்த குறுக்குவழியை மேற்கொள்கிறேன். அவர்களுக்குள் சின்ன சின்ன பிரச்சினைவந்தாலும் அதனை பெரிது படுத்தி தங்கையை சண்டைபிடிக்க மூட்டிவிடுகிறேன்'' என நினைத்து சந்தோசப் பட்டாள் மிஸ்ரியா.

ஒன்றாகப் பிறந்தவர்களுக்குள்ளே இவ்வளவு வெறுப்பு பொறாமை என்றால் மற்றவர்களை கேட்கவேண்டுமா?

நதீராவுக்கு சகோதரிமீது எந்த சந்தேகமும் எழவில்லை. சகோதரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதற்கும் கட்டுப்பாது வாழவேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தான் இவ்வாறெல்லாம் பேசுகிறாள் என்றுதான் எண்ணி இருந்தாள்.

மதியநேரம் கடமைக்கு சென்ற கணவன் வீடு திரும்பவில்லை. சகோதரியோடு சிறிது நேரம் கதைத்து பொழுது போக்குவோம் என்று போனாள் நதீரா.

“வா...வா” என்று கள்ளமனதை காட்டாமல் கனிவாக வரவேற்றாள் மிஸ்ரியா.

“புருஷன் வந்திற்றா போதும் கொஞ்சம் இருந்து கதைக்கமாட்டீயே! நிண்டநிலையிலே ரெண்டு வார்த்தை பேசிற்று போயிருவியே” என்றாள் மிஸ்ரியா.

“அவர் மாலை ஆறு மணிக்கு பிறகுதான் வாறவரு. ஒன்பதரைக்கு படுக்கபோயிருவன். மூன்று மணித்தியாலமாவது அவரோடு இருந்து பேசாட்டா அவர் எப்படி நினைப்பார்? அவர் வீட்ல தனியா இருந்துயோசிச்சி கெண்டிருக்க நான் உன்னோட பேசி கும்மாளம் அடிக்கிற நல்லதா?” எனக்கேட்டாள் நதீரா.

“அவர் தனிய இருந்தா உனக்கென்ன? கதைச்சிக்கு இருந்து போகவேண்டியதுதான்” என்றாள் மிஸ்ரியா.

“உன்ட புருஷன் புருஷன். என்ர புருஷன் எனக்கு புருஷன் இல்லியா? வெளிநாட்டில் இருந்து உண்ட புருஷன் வந்தா அவரை சுத்தி நிற்கிறியே. கொஞ்சம் விலகமாட்டியே. யாரோடும் ஒரு வார்த்தை பேசமாட்டியே” என்றாள் நதீரா.

“என்டாலும் உன்ட புருஷன் நம்ம குடும்பத்தவரோட பணிஞ்சு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போறல்லியே என்ற புருஷன் என்னபணிவாக எல்லாரிட்டயும் பழகுறார்" என்றாள் மிஸ்ரியா.

"உன்ர புருஷன் பணியிறதுல நியாயம் இருக்கு. என்ர புருஷன் பணியாம போறதிலயும் நியாயம் இருக்கு. என்ர புருஷனுக்கும் உன்ர புருஷனுக்கும் எவ்வளவோ வித்தியாசம் இருக்கு புரியுமா?" என்று கேட்டாள் நதீரா.

இந்த பதிலைக்கேட்டு ஆடிப்போனாள் மிஸ்ரியா வாயிலிருந்து எந்த வார்த்தையும் வரவில்லை

தனது கணவன் தங்கையின் கணவனைவிட கீழ்ஸ்தானத்தில் உள்ளவர் என்பதை ஜீரணிக்க சிரமப்பட்டாள் மிஸ்ரியா தங்கை நதீராவுக்கும் அவள் கணவனுக்குமிடையே விரிசலை ஏற்படுத்தி அவர்கள் விருப்பமின்றி வாழ்வதை பார்த்து ரசிக்கவேண்டும் என்று தீர்மானித்தவளாய் இலேசாக சிரித்தாள். இந்நோக்கம் தெரியாத நதீரா வாய்பேசாது நின்றாள்.

அதேநேரம் தன் கணவன் தனது குடும்பத்தாருடன் ஒட்டி உறவாடாது வெட்டிவிலகுவதை நினைத்து வேதனைப்பட்டாள். சகோதரி மிஸ்ரியாவின் குத்தல் வார்த்தைகளால் கணவன் மீது வெறுப்பு கொப்பளிக்க தொடங்கியது.

பற்றுபாசத்துடன் உயிரையே வைத்திருந்த கணவன் ஸறூக்மீது வெறுப்பு காட்டத்தொடங்கினாள் நதீரா. தன்மீது எதற்கும் ஏன் எரிந்து விழுகிறாள். என்பது தெரியாது தவித்தான் ஸறூக்

தனது திட்டம் படிப்படியாக சரிவருவதை உணர்ந்து மகிழ்ந்தாள் மிஸ்ரியா. தங்கை நதீரா கணவனை வெறுத்து நடப்பதற்குரிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



விடயங்களையே சொல்வாள் மிஸ்ரியா.

கணவரோடு விருப்புடனும் பாசத்துடனும் பழகிய நதீரா வேண்டா வெறுப்புடன் பழகத்தொடங்கினாள். வேலை முடிந்து வீட்டுக்கு வந்திருந்தான் ஸறூக். கை,கால்கழுவி சாறம் உடுத்தி சாய்வுநாற்காலியில் அமர்ந்தான். பத்துநிமிடங்களுக்கு மேலாக தொலைக்காட்சி பார்த்தான். ஆனால் தேனீர் வரவில்லை.

வேலைமுடிந்து வீட்டுக்கு வந்தால் பாய்ந்து அடித்து தேனீர் தயாரித்து வரும் நதீராவுக்கு இப்போது என்ன நடந்தது? என சிந்திக்கத் தொடங்கினான்.

சகோதரியின் வீட்டில் சகோதரியோடு உரையாடுவது கேட்டது. "நதீரா... வாங்க" என்று கூப்பிட்டான் ஸறூக்

"வந்திட்டாரு. இனி மிசின்போல இயங்கு வந்தா கொஞ்சம் பொறுக்கமாட்டாரு" என்று நதீரா சகோதரி மிஸ்ரியா கூறுவது ஸறூக்கின்காதிலும் விழுந்தது.

"என்பொண்டாட்டியை கூப்பிட்டா இவளுக்கென்ன? நான் வாறநேர மெல்லாம் கூப்பிட்டு வச்சு கதைக்காள்" என்றெண்ணினான் ஸறூக்.

நதீரா தேனீர் தயார் செய்து கொண்டு போனாள். ஸறூக் எதுவும் பேசவில்லை. தேனீரை வாங்கி பருகினான். அப்போது நதீராவை கூப்பிட்டாள் மிஸ்ரியா. பலமாக சத்தமிட்டே கூப்பிடுவது வழமை.

"வந்தாய் ஓடினாய் தேனீர்போட்டு கொடுத்தாய் வந்து கதையை முடிச்சிட்டுப் போக வேண்டியது தானே" என்றாள் மிஸ்ரியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“என்ன கதை?” புரியாது கேட்டாள் நதீரா
“காணியை குத்தகைக்கு கொடுக்கப்போறியா? அல்ல நீ செய்யபோறியா?” எனக்கேட்டாள் மிஸ்ரியா.

“என்னவோ அவர் யோசித்து செய்யப்பட்டும் அது ஆம்புளடவேலை” என்றாள் நதீரா.

“எல்லாம் அவர் வேலை என்று விடாம நீ தலையிட்டு உன் விருப்பத்தை செய்” என்றாள் மிஸ்ரியா. இந்த உரையாடல் ஸறூக்கின் காதிலும் விழுந்தது. கேட்கட்டும் என்றுதான் மிஸ்ரியா பலமாக கதைத்திருக்கவேண்டும்.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்து இரண்டு மணித்தியாலங்கள் கடந்தும் நதீரா வந்து சேராததினால் அவளை அழைத்தான் ஸறூக்.

“வருவேன்தானே! கொஞ்சம் பொறுக்ககூடாதா?” என்றவாறு வந்தாள் நதீரா” ஒரு நாளும் பேசாத மாதிரி பேசுகிறாளே! சகோதரியின் பேச்சுக்கு அடி பணிந்து விட்டாளே! ஒரு பெண்ணுக்கு, கணவனுக்கு அடுத்ததுதான் எவரும், நதீரா அவளின் உறவினர் யாவருக்கும் கடைசியில்தானே என்னை வைத்துள்ளாள்” என நினைத்தான் ஸறூக். மறுநிமிடம் வேதனையுற்றான்.

“என்ன கூப்பிட்டுவிட்டு பேசாம இரிக்கீங்க” எனக் கேட்டாள் நதீரா.

“நதீரா உங்க சகோதரி கதைச்சதெல்லாம் காதில விழுந்திச்சு. விழட்டும் என்றுதானே சத்தமாக கதைக்கா. அவக்கு சொல்லுங்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ர வாழ்க்கை விஷயத்தில் தலையிடவேணாம் என்று. நாமரெண்டு பேரும் பேசி முடிவெடுக்கிற விஷயத்தை அவசொல்ல முடியாது. திருமணத்துக்கு பொறவு நம் குடும்ப விஷயத்திலே அவ தலையிட முடியா'' என்றான் ஸறூக்.

"'அவ கதைச்சா நமக்கென்ன? நாம நம்ம விருப்பத்துக்கு நடக்க வேண்டியதுதான்'' என்றாள் நதீரா.

"அப்படித்தான் இப்ப சொல்லுவாய். அடிக்கு மேல அடி அடிச்சா அம்மியும் நகரும் என்பாங்க. உங்களுக்கிட்டே எந்த நேரமும் பேசுவதால மனசு மாறிவிடும். அவக்கிட்டே சொல்லுங்க. எங்க குடும்ப விஷயத்துல தலையிடாதீங்க என்டு'' என்றான் ஸறூக்.

"அவ சொன்னா சொல்லட்டும் நாம யோசிச்சி செய்வோம்'' என்றாள் ஸறூக்கின் மனைவி நதீரா.

"இப்படி அவ கதைக்க கதைக்க நீங்க எதுவும் பேசாம இரிக்கிற நல்லதா? அதுவும் காலையில் வேலைக்கு போனா இரவு ஏழு மணிக்கு வீட்டுக்கு வாறேன். அதுக்கு பிறகு இரண்டு மணித்தியாலம் நாம் பேசிறம். பிறகு படுக்கைக்கு போறம். இந்தரெண்டு மணித்தியாலதுக்குள்ளே உங்க சகோதரி கூப்பிட்டு கூப்பிட்டு ஓசையும் ஒப்பாரியும் வைச்சு கதைக்கிற நல்லதா? அவட புருஷன் வெளிநாட்டுலையும் வேறு எங்கேயும் இருக்கிறதுக்கு நாம என்ன செய்ய முடியும்? நாம கொஞ்ச நேரம் சேர்ந்திருக்க விடுகிறாள் இல்லியே'' என்றான் ஸறூக்.

தனது கணவன் ஸறூக் பேசுவது நியாயமாகப்பட்டது. நதீராவுக்கு, என்றாலும் உண்மையை ஏற்றுக் கொள்ளமுடியாத நிலையில் இருந்தாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரிக்கு கட்டுப்பட்டாலும் கணவனுக்கு பணியாத முரட்டுத்தன சுபாவமுள்ளவளாக இருந்தாள் நதீரா. அன்புள்ள மனைவி அதற்கு எதிர்மாறாக நடந்தாள். ஸறூக் பொறுமையோடு எல்லாவற்றையும் அனுபவித்தான்.

அடுத்தநாள் வேலை சென்று வீடு திரும்பிவரும் போது சகோதரியின் வீட்டில் அவளோடு நதீரா உரையாடுவது கேட்டது.

வேலைமுடிந்து வரும் வேளையில்தான் நதீராவை அவளது சகோதரி அழைத்துப்பேசுவது வழமை. இன்று அவ்வாறுதான் செய்திருக்கிறாள் என்பதை அறிய ஸறூக்கிற்கு அதிகநேரம்பிடிக் கவில்லை. இருந்தும் நதீராவை கூப்பிடவில்லை.

முகம், கால் கழுவி சாய்வு நாற்காலியில் அமர்ந்தான். அப்போது மனைவி நதீரா வரவில்லை. வானொலியை அழுத்தினான். அப்போதும் வரவில்லை. பக்கத்து தேநீர்க்கடைக்குப் போய் தேநீர் அருந்தி விட்டு வந்தான். அப்போதும் அவள் வரவில்லை. சகோதரிகளுக்கிடையே உரையாடல்தான் தொடர்ந்தது.

ஸறூக்கிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. எந்த ஆணுக்கும் ஆத்திரம் வரும்தானே. என்றாலும் பொறுமையை கடைப்பிடித்தான். ஸறூக் வந்துள்ளதைத் தெரிந்துதான் இருக்கிறாள் என்பதை வானொலியை அழுத்தியும் வராதது உறுதியாக்கியது.

வேலை முடிந்து வீட்டுக்கு வந்தால் தன்னைச் சுற்றியே நிற்கும் அன்பு மனைவியை அவனது சகோதரி மிஸ்ரியா இப்படி மாற்றிவிட்டாளே என்பதை நினைத்து வேதனையுற்றான் ஸறூக்.

நதீராவை திருமணம் செய்து அவளுக்கு வாழ்வளித்தும் நன்றியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



லாதவளாகி விட்டாளே என்பதை நினைக்க நெஞ்சம் புண்ணாகியது. இனியும் வாய்மூடி மௌனமாக இருப்பதில் அர்த்தமில்லை என்று நினைத்த ஸறூக் மனைவியை கூப்பிட்டான்.

"வாறேன்" என்ற வார்த்தை சொல்லி ஐந்து நிமிடங்களின் பின்னர் வந்தாள்.

"நான் வந்து ஒரு மணித்தியாலம் ஆகுது. உங்களுக்குத் தெரியும். ஏனென்டா வானொலியையும் போட்டிருக்கன். அதைக்கேட்டும் உரையாடி கதைச்சு கொண்டிருப்பதென்டால் கணவன் தேவல்ல. கடையிலே தேனீர் குடிச்சுப் போட்டு இருக்கிறன். என்னை விட உன்ர சகோதரிக்கு நீ தேவைப்படுகிறாய். இப்படி வேண்டா வெறுப்பாக இருப்பதை விட ஒரு முடிவெடுப்பது நல்லது" என்றான் ஸறூக்.

"உங்களை இழக்கிறதென்டாலும் ரெடி. சகோதரி உறவையோ பேசிறதையோ நிப்பாட்டமாட்டன்" என்றாள் நதீரா.

எந்த குற்றமும் செய்யாமல் அன்பாக இருந்து நதீராவுக்கு வளமான வாழ்க்கை கொடுத்ததிற்கு இப்படியா பேசுகிறாள்? என்பதை நம்பமுடியாமல் இருந்தது ஸறூக்கிற்கு;

எந்த பெண்ணிற்கும் கணவனுக்கு அடுத்ததுதான் அனைத்தும். வாழத் தெரியாதவளை மணமுடித்து வருந்தவேண்டி வந்து விட்டதே என்று கலங்கினான் ஸறூக்.

"நீ எந்நேரம் வேணுமென்டாலும் போய் கதைச்சிரு. நேரத்துக்கு சாப்பாடு தேனீர் தரவேணும். நான் வீட்ல நிக்கிற நேரமாவது வந்து என்னோட இருக்கவேணும். தனிய இருந்து நான் சிந்தித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவலைப்படுவதென்டா நீ எதற்கு'' என்றான் ஸறூக்.

''விருப்பமில்லென்டா போயிடுங்க'' என்றாள் நதீரா.

எவ்வளவு சாதாரணமாக சொல்கிறாளே! என்னை மதியாமல் பழகுகிறவள், பேசுகின்றவளோடு எப்படி வாழ முடியும்? நீ அடிமையாய் இரு, இல்லாவிட்டால் போய்விடு என்பது போல் அல்லவா நடக்கின்றாள்'' என்று நினைத்தான் ஸறூக்.

ஸறூக் தனது உடைகளை மாத்திரம் எடுத்துக் கொண்டு சகோதரியின் வீட்டுக்குப் புறப்பட்டான்.

கணவனுக்கு''போகாதீங்க'' என்ற ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை, தடுக்கவில்லை. சும்மா பார்த்து நின்றாள்.

வாழத்தெரியாதவளுக்கு வாழ்வளிக்க வந்தோமே. என் வாழ்க்கையை அர்த்தமில்லாததாக்கி விட்டாளே. அன்பாக இருந்தவள் சகோதரியின் உறவுக்குப் பின் வேம்பாக மாறிவிட்டாளே'' என நினைத்தான் ஸறூக்.

ஸறூக் நதீராவைப் பிரிந்து ஒரு மாதமாகிவிட்டது. உணர்ந்து திருந்தி அழைத்துப்போக வருவாள் என்றிருந்த ஸறூக் ஏமாற்றம் அடைந்தான். நதீரா அன்பாக நடந்த காலத்தை நினைத்து சந்தோசப்பட்டான். எந்தக் கெடுதியும் செய்யாத என்னை ஏன் வெறுத்து நடக்கத் தொடங்கினாள். என்ற எண்ணமே அவனைத் துயரில் ஆழ்த்தியது.

நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பதுபோல கணவனின் பிரிவின் பின்னே அவனின் அருமை தெரியத் தொடங்கியது. நதீராவுக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமைப்பதற்கு உணவுப் பொருள் வாங்கவே மிக சிரமப்பட்டாள். கணவனைப் பிரிப்பதற்கு சதி செய்த மிஸ்ரியா கூட எதுவும் கொடுப்பதில்லை எல்லா கஷ்டத்தையும் அனுபவித்தாள். பிள்ளைக்கு பால் வாங்க வேண்டுமே. கணவன் பரிசளித்த மோதிரம் ஒன்றை விற்று ஒரு மாதம் காலத்தைக் கடத்தினாள்.

இனியும் கஷ்டப் படமுடியாது என்றுணர்ந்த நதீரா கணவன் சறூக்கை அழைத்துவரப் போனாள்.

ஸறூக்கின் காலில் விழுந்தாள்.

"நான் செய்த தவறை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் முட்டாள் தனமா சகோதரியின் சொல்லுக்கு நடந்திட்டன்.

சகோதரி நம்மோட பொறாமையுள்ளவ. அவட குள்ளம் தெரியாம நடந்திட்டன். இனி சகோதரியின் வீட்டுப்பக்கமே போகமாட்டேன். நீங்க வீட்டிலிருக்கும் போது உங்க பக்கத்திலேயே இருப்பேன். வாங்க வீட்ட போவோம்'' என்றழைத்தாள் நதீரா.

''எந்நாளும் ஒருவரை ஏமாற்ற முடியாது. மனைவியின் சகோதரி மிஸ்ரியாவின் கெட்ட தனத்திற்கு நல்ல தீர்ப்பை இறைவன் வழங்கிவிட்டான். சகோதரி உறவும் முடிந்து விட்டது" என்று நினைத்தான் ஸறூக்.

மனைவியோடு புறப்பட்டு வீடு வந்து சேர்ந்தான் ஸறூக். நதீரா சகோதரியின் வீட்டுப்பக்கமே போவதில்லை. அவர்களது வாழ்வு அமைதியாக நகர்ந்து கொண்டிருக்கிறது. பக்கத்து வீட்டில் நதீரவின் சகோதரி மிஸ்ரியா இருக்கின்றாளா, இல்லையா என்பது கூட தெரியாது. ஏனென்றால் அவள் இப்போது பேசுவதுகூட மெதுவாகத்தான்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயத்தில் ஒரு நிறம்

அந்த அலுவலகம் இன்னும் திறக்கவில்லை. எட்டுமணிக்கெல்லாம் வந்தவர்கள் தேநீர்க்கடைகளிலும், தெருச்சந்திகளிலும் நின்று வம்பளந்து கொண்டிருந்தார்கள்.

எட்டுமணிக்கு வந்து விடுவதாக முகாமையாளரிடம் கதை அளப்பவர்கள் இன்னும் வரவில்லை! எட்டு மணிக்கெல்லாம் முகாமையாளர் வந்தால்தானே யார் முந்துகிறார்கள்? யார் பிந்துகிறார்கள் என்பது தெரியும். தலையே பிந்தும்போது வால்கள் என்ன செய்யும்? வால்களாகத் தானிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



எட்டரை மணியாகும்போது எல்லோரும் வந்துவிடுவார்கள். அதன் பிறகுதான் முகாமையாளர் வருவார். தவிர்க்கமுடியாத காரணங்களினால் அன்றைக்கு ஐந்து பத்து நிமிடங்கள் கடந்து வருபவர்கள் உக்கிரமான பேச்சை எதிர்நோக்க வேண்டிவரும்.

ஏனோ... சிலருக்கு தினமும் முகாமையாளரின் காலை நூடில்ஸும், கோழிக்கறியும் கிடைக்கும்.

"ஐந்து பத்து நிமிடங்களுக்குள் பிந்தி வருபவர்களுக்கு ஏன் இந்த தண்டனை? முகாமையாளரே நீயே பிந்தி வருகிறாய்! சட்டம் மற்றவர்களுக்கு?" என்று நியாயவாதிகளின் மனம் குமுறும்.

சுகுமார் இதற்கெல்லாம் கட்டுப்பட்டவன் அல்லன். அவன் நேர்மையாளன். எதையும் பேச தயங்காதவன். உண்மைக்காக எத்தனை பேர் முன்னும் எதிர்த்து பேசுவான்.

சுகுமாரின் தாய்க்கு திடீரென சுகவீனம் ஏற்பட்டது. நோய் சொல்லிக்கொண்டாவரும்! தாயாரை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று அலுவலகம் வரும்போது நேரம் ஒன்பது மணியாகிவிட்டது.

நேராக மேலதிகாரியின் அறைக்குள் சென்றான். ஒன்றன் பின் ஒன்றாக பப்படத்தை கொதித்த எண்ணெய்யில் போட்டாற்போல் பொரிந்து கொண்டிருந்தார் மேலதிகாரி நாதன்.

"அலுவலகத்துக்கு வாறன்டா அலுவலகத்துக்கு வாற மாதிரி வரணும். நானும் பாக்கன் உங்கட போக்கு சரிப்பட்டு வராது. வரவர மோசம். லீவு போட்டிற்று போயிரணும்" என்றார் மேலதிகாரி நாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நிலமை தெரியாம பேசிறீங்க" என்றான் சுகுமார்.

"எனக்கு என்ன நிலமை தெரியா? எல்லாம் தெரிஞ்சுதான் சொல்றேன்." என்றார் மேலதிகாரி.

"உங்களுக்கு ஒண்ணும் தெரியா. ஒருத்தனுக்கு தாயைவிட பெரிசா என்ன இருக்க முடியும்? என் தாயோட நிலமை மிக மோசமா இருக்கு. ஹொஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணிட்டு வாறன். பக்கத்தில் இருக்க வேண்டிய நான் மனிசத் தன்மையோட சொல்லிற்றுப் போக வந்தேன். நீங்க என்னெண்டா நாய் மாதிரி பாய்றீங்க. இதற்கு முன்ன எப்பவாவது பிந்தி வந்திருக்கிறேனா? எந்த நாளும் பிந்தி வாறவங்க ஒரு பட்டியலிருக்கு. கண்ணை மூடிக்கிட்டு இருக்கீங்க. கிரிக்கட் நடந்தா கட்பண்ணிட்டு வீட்டில நிற்கிறானுகள். வேலை நேரத்தில கடைகள்ல அமர்ந்து கிரிக்கட் பார்க்கிறானுகள். இவனுகளுக்கு நடவடிக்கை எடுக்கிறேல்ல. உங்களை நேர்மையான மனிசன் என்றுதான் நெனைச்சு வந்தேன்" ஆத்திரம் தீருமட்டும் கூறினான் சுகுமார்.

மேலதிகாரி நாதன் கொஞ்ச நேரம் தடுமாறிப்போனார்.

"மற்றவங்க பிந்தினா அது நான் பாக்கிற விடயம். நீ ஏன் பிந்தணும்?" விடாப்பிடியாகக் கேட்டார் நாதன்.

"இன்டைக்கு நான் லீவு. உங்களைக் கேட்டு எடுக்கிற லீவு தேவல்ல. கேட்காம எடுக்கிற லீவு. வந்தது மடத்தனம்" என்று கூறி லீவு விண்ணப்பம் எழுதி பிரதம லிகிதரிடம் கொடுத்து விட்டுப்போனார் சுகுமார்.

அம்மாவின் உடல் நிலை, மேலதிகாரியின் சூழ்நிலை தெரியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கை இவைகளினால் மிக மிக நொந்து போயிருந்தான் அவன்.

'சிலர்இருக்கிறார்கள், தனக்கு ஒரு நிலை வந்தால் வேறாகவும், அதே நிலை மற்றவர்களுக்கு வந்தால் சாதாரணமாகவும் எண்ணுகிறவர்கள். பெரும் சுயநலவாதிகள் இவர்கள். இனியும் ஏதும் கதைத்து குழப்பினால் இடமாற்றம் பெற்றுச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை' என்று சுகுமார் தீர்மானித்தான்.

வைத்தியசாலையில் இருந்து வரும் வழியில் சக ஊழியர் சலீம் தென்பட்டான்.

"சலீம் ஒப்பிஸ்ல என்ன விசேஷம்?"

ஒண்ணுமில்ல. மனேஜரின் அடங்கா வாயைத் தெரியும்தானே! ஒவ்வொரு செக்கனும் அசைந்து கொண்டேயிருக்கும்! அவரின் கதை பலரின் நெஞ்சைத் துளைப்பது இதயமற்ற அவருக்குத் தெரியாதே" என்றான் சலீம்.

"அம்மாவுக்கு சுகமில்லை. ஒரேயொரு ஆண் பிள்ளையான நான் கவனிக்கல்லைன்னா யார் பார்ப்பது? அம்மாவை ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணிட்டு சொல்லிட்டுப்போக வந்த எனக்கு என்ன ஏச்சு ஏசினார்" என்று நிறுத்தினான் சுகுமார்.

"எல்லாம் உங்க ஆட்கள்தான் அவருக்கு சப்போட்டுப்பண்ணுறாங்க. அநீதியை எதிர்க்க துணிவில்லாவிட்டாலும் வெறுக்க தெரியல்லே! வெறுப்பாக எல்லோரும் இருந்தா அவர்ர கொட்டத்தை அடக்கலாம். அநியாயத்துக்கு உரம் போடுரவங்க நிறையப்பேர் நம்ம அலுவலகத்தில இருக்காங்க. அது வரைக்கும் நம்ம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலகத்துல நேர்மை இருக்காது'' என்றான் சலீம்.

"அது சரி அம்மாவுக்கு எப்படி?'' என்று கேட்டான் சலீம்.

"இது வரைக்கும் ஐந்து சேலைன் கொடுத்திருக்கு. இப்பதான் கொஞ்சம் எழுந்திருக்கிறா'' என்றான் சுகுமார்.

"லீவு போனா பரவாயில்லே வயசான காலத்துல நாமதானே பார்க்கணும் முட்டைக்கண்ணு மேலதிகாரிக்கு என்ன செய்ய ஏலும்?''

"நான் வேலைக்கு வாரண்ணா நேத்து வந்திருப்பன். அவர் காட்டுக்கூச்சல் போட்டபடியால் அம்மாவுக்கு பூரணசுகம் வந்தாப் பிறகுதான் வருவேன்'' என்றான் சுகுமார்.

"சுகுமார்... நான் மார்க்கட்டுக்குப் போகணும். நான் வாறேன்'' என்று விடை பெற்றான் சலீம்.

சுகுமாரும் சலீமும் இரு வேறுபட்ட சமூகங்களைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் நெருங்கிய அன்பு நண்பர்கள். இருவரும் ஒன்றாகவே உண்பார்கள். ஒருவரின் ரகசியம் மற்றவருக்குத் தெரியும். அந்தரங்க விடயங்ளை மனம்விட்டுப் பேசிக்கொள்வார்கள். நல்ல உள்ளங்களுக்கு வேற்றுமை ஏது?

ஒரு வாரத்தின் பின்னர் சுகுமாருடைய அம்மாவின் உடல் நிலை தேறியது.

எட்டு நாட்களின் பின்னர் அலுவலகம் சென்றார் சுகுமார். சுகுமாருக்கு ஏற்பட்டகதி தெரிந்தமையால் மேலதிகாரி எதுவும் பேசவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் அடிமனதில் சுகுமார் மீது கோபத்தீ கொழுந்து விட்டெரிந்தது. வேளை வந்தால் ஆளை வாட்டி எடுக்கவேண்டும் என்ற முடிவோடு இருந்தார்.

இந்த வருடம் சுகுமாருக்கு அதிர்ஷ்டமில்லாத வருடமாகி விட்டது போலும். தாயாரின் நோய் சுகமாக, அவனது மனைவி முதல் பிள்ளையை சுகமாக பெற்றெடுத்தவளுக்கு இரண்டாவது பிள்ளைப் பேறு வேதனையை உண்டாக்கியது. நாளை பிள்ளை பிறக்கும் என்று ஒரு வாரமாக வாய்ப்பாட்டை ஒப்புவித்த டாக்டரும் ஆச்சரியக்குறியோடு கையை விரித்துவிட்டார். அம்பாறை வைத்திய சாலைக்கு அம்புலன்ஸ் மூலமாக அனுப்பப்பட்டாள் சுகுமாரின் மனைவி. விடயம் தொலைபேசி மூலமாக சுகுமாருக்கு அறிவிக்கப்பட்டது. மேலதிகாரியின் அறையை நாடினான். விளக்கத்தை சொன்னான்.

"இப்படி திடீர்திடீரென லீவு எடுத்தா இந்த வேலைகளை யாரைக்கொண்டு செய்விக்கிற?" வழமையான மூர்க்கத்தொனியை வெளிக்காட்டினார் மேலதிகாரி நாதன்.

உயிருக்கு உயிரான என் மனைவி உயிருக்காக போராடிக் கொண்டிருப்பதை நான் பார்க்காம வேறு யார் பார்ப்பாங்க? எந்த நேரத்திலே என்ன பேசணும் எந்த நேரத்திலே எப்படி நடக்கனும் என்ற விபரம் தெரியாத உங்களுக்கெல்லாம் பிரமோஷன் கொடுத்தாங்களே அவங்கள செருப்பால அடிக்கணும் கிரிக்கட் பார்க்க சேவகனுக்கு டியூட்டி லீவு கொடுப்பாய். விளையாட கிளார்க்கு முருகனுக்கு லீவு கொடுப்பாய். என் தாய் உயிருக்கு போராடுகிற போது லீவு இல்லே என்பீர். தாய்க்கு பின் தாரம் என்பார்கள். அந்த தாரத்திற்கு ஆபத்தான கட்டம் வந்தும் லீவு இல்லை என்கிறாய். நீயும் ஒரு மனுஷனா....?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனியும் இங்கே வேலை செய்ய விரும்பவில்லே. நான் மாவட்ட மேலதிகாரியிடம் சொல்லி லீவு எடுக்கிறேன். எங்கென்றாலும் மாறி போகிறேன். இனி இந்த அலுவலகத்திலே நீங்கள் இருக்கும் வரையும் காலும் வைக்கமாட்டேன்" ஆத்திரம் மேலிடக் கூறிவிட்டு புறப்பட்டான் சுகுமார்.

பேய்பிடித்த பாலகன்போல் வார்த்தையின்றி வாய் மூடினார் நாதன். மாவட்ட மேலதிகாரியிடம் போய் சொன்னான்.

"நீங்கபோய் உங்க மனைவியைப்பாருங்க. சுகமாகும் வரை பக்கத்திலே நில்லுங்க. என்ன உதவி வேனுமோ எனக்கிட்டக் கேளுங்க. இடமாற்றம் தேவையென்னா கொழும்புக்குப் போய்த்தான் செய்யனும்" என்றார்.

அதன் பிறகுதான் நிம்மதியான மூச்சு வந்தது சுகுமாருக்கு! கிளை முகாமையாளர் பிடிவாதக் குணமுள்ளவர் என்பது பிரதேச முகாமையாளருக்கு தெரிந்த சங்கதிதான்.

பிரசவ வேதனையில் துடித்தபடியே இருந்தாள் சுகுமாரின் மனைவி. ஆனால் பிள்ளைதான் பிறந்த பாடில்லை.

"நல்லவர்களை இறைவன் பரீட்சிப்பான். துன்பம் தொடர விடமாட்டான். இறைவா உனைப்போற்றுகிறேன்" இறைவனைப் போற்றிக் கொண்டான் சுகுமார். அழகிய ஆண் குழந்தை பிறந்தது தாயும் சேயும் சுகமாக இருந்தார்கள்.

ஒரு வாரத்தின் பின் வீடு வந்து சேர்ந்தார்கள். சுகுமார் எல்லா இக்கட்டான நிலையிலும் இருந்தும் மீண்டு விட்டான். இடமாற்றம் பெறவேண்டிய ஒன்றே பாக்கியாய் இருந்தது. தனக்கு நேர்ந்தகதி

2 18651

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

REFERENCE



எல்லாம் மேலதிகாரிக்குத் தெரியும்தானே! 'இரங்குவார். ஏதும் பேசமாட்டார்' என்ற நோக்கில் அலுவலகம் சென்றார் சுகுமார்.

"தொடர்ந்து லீவு எடுத்த படியாலே உங்கட செக்ஷன் வேலை பாக்கியாயிருக்கு. இந்தக் கிழமைக்குள்ள எல்லா வேலையையும் முடிச்சிடனும்" என்றார் முகாமையாளர்.

"நான் என்ன சும்மாவா கட்பண்ணினன். கிரிக்கட்டா பார்த்தன்? மத்தவங்க லீவு எடுத்தா யாரையும் போட்டு முடிப்பீங்க. நான் லீவு எடுத்தா மட்டும் என்ரவேலை அப்படியே இருக்கும். மூணு கிழமை வேலை ஒரு கிழமையிலே முடிக்க முடியுமா?. இரண்டு கிழமையாவது வேணும்" என்றான்.

"இந்தக் கிழமைக்குள்ள முடிக்கனும்" பிடிவாதமாகக் கூறினார் முகாமையாளர்.

"எவராலும் முடியாதே! கோபம் கொண்டவர்களோட வேலை செய்ய முடியாது. நான் வாறன் இல்லே போறன். கொழும்புக்குப் போய் இடமாற்றம் எடுத்து வேற இடத்திலே வேலை செய்யப்போறன். குட்பை" கூறிவிட்டு சென்ற சுகுமார் வெற்றியுடன் இடமாற்றம் பெற்று வேலை செய்கிறான்.

அவன் சொன்னதுபோல அலுவலகப் படியை இன்னும் மிதிக்கவில்லை. நாதன் இடமாறிப் போனால் ஒரு வேளை மிதிக்கலாம்!

(நவமணி 16.07.2000)

பொது நூலகம் நகர சபை கல்முனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒ
லு
வி
ல்

அ
மு
த
ன்

இலக்கியவானில்
இலங்கிடும் நிலவொளி...!
புனை கதை, கவிதை, கட்டுரை, நாடகம்
மெல்லிசைப்பாடல்களென
இலக்கியப்பரப்பினில்
1976 முதல் முத்திரை பதித்தவர்.
பொய்மை, பூசல், ஏற்றத்தாழ்வுகள்
மனித சமுதாயத்தின் அக்கினி மலர்கள்.
இவற்றை தமிழ்ப்படிக்கட்டுகளில்
நின்று கலை மணத்துடன்
முழக்கமிட்டு எழுதிவரும் மானிடநேயன்.
சமுதாய பரிவுடைய ஒலுவில் அமுதனின்
ஐந்தாவது வெளியீடு 'மனங்களிலே.. நிறங்கள்'
சிறுகதைத் தொகுதி.
மனிதனை புரியவைக்கும் பொருள் பொதிந்த
கதைகள். இவரது சத்தியப் போராட்டத்தில் இது
மற்றுமோர் ஆயுதம்.

கலைஞரே... பயணம் தொடர வாழ்த்துக்கள்!

எம். ஏ. உதுமாலெவ்வை
(வித்யா ஜோதி)
தொலைபேசி: 067 - 77614

*Printed by:* **METRO OFFSET**, *Main Street, Akkaraipattu.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org